உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம் - இராமலிங்கசுவாமிகள்

# சற்குருவெண்பாவந்தாதி

## சற்குருவற்புதப்பதிகம்

## ஆனந்தக்கண்ணி.

இவை

சிதம்பரம் - சமரசபஜனை

ச - மு - கந்தசாமிபிள்ளையவர்கள்

இயற்ற,

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

கூடலூர் - ஐகோர்ட் வக்கீல்

அ - சுப்பராயலுரெட்டியாரவர்கள்

உதவியால்

சென்னை:

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

சார்வரி௵

OFFICE OF THE REGISTRAR

REGISTERED

11 FEB 190

MADRAS.

X247M28 N01

உ

குருவேதுணை.

# இந்நூலச்சிட்டாரது

# சிறப்பு.

புண்ணியம்பூத் தொளிர்தருநம் மருட்பிரகா சப்புனிதற்
போற்றி யன்பாற்
பண்ணியசற் குருவெண்பா வந்தாதி யின்னயத்தைப்
பரிந்து நோக்கி
மண்ணுலக மனமுவந்து கண்களிக்க வச்சிட்டு
வழங்க வைத்த
கண்ணியன் ஐகோர்ட்டு வைக்கீனற் சுப்பராயலுநங்
கனவான் றானே.

---

அஷ்டாவதானம்

பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

223161

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.

# சாத்துகவிகள்.

உத்தரஞான சிதம்பரமென்னும்

பார்வதிபுரத்து வசிக்கும்

சத்தியஞானானந்தேந்திர சரஸ்வதி யதீஸ்வரர்

அருளிச்செய்த

வெண்பா.

குருராம லிங்கமெனக் கூறியுல குய்யப்
பெருராம லிங்கம் பிறங்குந்—திருநாமத்
தோத்திரத்தைப் பூரியிட்ட சுத்தசிவ சித்தாந்த
மாத்திரத்தன் கந்தகுண வான்.

சீர்சான்ற பத்திசெய்யுஞ் சித்தகந்த சாமியுள்ளம்
நேர்சான்ற ராமலிங்க நித்தியன்றன்—பேர்சான்ற
ஆனந்தக் கண்ணீரினா லாகரிஷித் தோங்குமுண்மை
தானென்றுந் தோன்று சரதம்.

விருத்தம்.

திருவருட்பிரகாசனேதனதுமுகமுறச்செய்யவருள்வசமாகியே
செப்பினானுயர்பதிகமொப்பிலாத்தமிழினாற்றிசமுமாறந்தசுத்த

மருவுசமரசமேவுசன்மார்க்கமரபினின்வாழையடிவாழையாக
வந்தெழில்கொள்கந்தசாமிப்பெயர்ச்சற்குணன்வள்ளருட்டஞ்சமு
தெருவமிகுதில்லையிற்கிருபாவிலாசமாச்சித்விலாசம்புரக்குந்[ற்றோன்
திறலுளோன்வேதாந்தசித்தாந்தசமரசந்திகழுநன்னிலையினின்றே
கருவமில்லாமலேகாருண்யமில்லறக்காட்சியிற்புரிமாக்ஷியோன்
காரணக்கடவுணிலைசாரியம்பெறுபத்திகைகண்டகருணீகனே.

---

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

---

குருமொழியே யிலக்காகக் கொண்டுசந் மார்க்கநெறி
குலவித் தெய்வ
வருணிலையி னிற்றிளைக்குங் கந்தசாமிப் பெரியோ
னருளிச் செய்த
திருவளர்சற் குருவெண்பா வந்தாதி யின்னயத்தைத்
தேர்ந்து ஞான
மருவியசிற் சபையொளிரும் வடலூர்நன் முனிவரனே
மகிழ்வன் மாதோ.

---

புதுவை ம-ா-ா-ஸ்ரீ,

## பு. அ. பெரியசாமிப்பிள்ளையவர்கள்

இயற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகெலாங் கடந்த வொருபழம் பொருளினுண்மையை
    யுள்ளவா றறிந்து
நலமுறு ராம லிங்கதே சிகன்மே னவிலரு
    மற்புதப் பதிகம்
இலகுமா நந்தக் கண்ணி யந்தாதி யினியதே
    னெழுக்கிய தென்ன
மலைவறப் புகன்று மங்களம் பெற்றான் மற்றவ
    னெவனெனிற் பகர்தும்.

மதுமழை பிலிற்றும் பொதும்பர்கள் சுலவும் வளமலி
    காரணப் பட்டின்
மதிவலோர் நன்கு மதித்திட வாழ்வோன் மன்றுளே
    தனிநடங் குயிற்றும்
பதியருட் புகழைப் பண்ணொடு பாடிப் பத்தர்க
    ளுளத்தினி னிறைப்போன்
சதுருடை யன்பே யுருவமாங் கந்த சாமியென்
    றோதுமே தையனே.

---

அஷ்டாவதானம் பூவை - கலியாணசுந்தரமுதலியார்

மாணாக்கர்

## நின்றை - தங்கவேலு முதலியாரவர்கள்

இயற்றியது.

---

எந்தைகுருராமலிங்கவருட்பிரகாசப்பெருமானிணைமலர்த்தாள்
சிந்தையினின்மலர்தரச்சற்குருவெண்பாவந்தாதிதேன்போற்சொற்
விந்தைமிகுசமரசசன்மார்க்கசங்கத்துறையுமேலோரியாருஞ் [ருன்
செந்தமிழ்ப்பாவலனெனுநங்கந்தசாமிப்பெயர்கொள்சீமான்ருனே.

---

ம - ா - ா - ஸ்ரீ, பு. அ. பெரியசாமிப்பிள்ளையவர்கள்

மாணாக்கரிலொருவராகிய புதுவை ஒர்லெயான்பேட்டை

ம - ா - ா - ஸ்ரீ,

## ஜோ. நாராயண வெங்கடாசல நாயகரவர்கள்

இயற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

புனல்பெருகுலகிற் புகழொடுதோன்றுக
வெனவள்ளுவனா ரெடுத்துரைவாக்கிற்
கிலக்கியந்தானென் றிலக்கியவள்ளலார்
அடலார்பிறவிவெங் கடற்குக்கலனும்
வடலூர்வளநக ரிடம்வாழ்வள்ளலார்
இச்சகவாழ்வி னிச்சையையொரீஇப்
பிச்சுப்பிச்செனப் பேசும்வள்ளலார்
தத்துவங்கடந்தவோர் வத்துவினியலைத்

தான்கண்டுணர்ந்த தனியனுபவமே
வான்கண்டொக்க மதுரமாக
வஃழிணையுந்தம் மகந்தெளிந்துய்யப்
பஃழிறத்தானும் பகர்ந்திடும்வள்ளலார்
அம்மவோவுலசீர் வம்மினெனக்கூஉய்த்
தண்ணளிசுரக்குங் கண்ணிணைவள்ளலார்
பண்ணலம்பாநல மெண்ணிறையேனுந்
தேராவொருவன் றெற்றித்தெற்றிப்
பாராவோதப் பாங்கரினின்றிடு
மன்பொன்றுத வன்பரோர்செவியிற்
பண்டிழைதவத்தா னண்டினவ்வொலி
வயிரச்சிலையையும் வயங்கொண்மன்க்கலை
யன்றேயுருக்கி நின்றோவியமாக்
கண்ணீர்வார வெண்ணாம்வேறு
யானந்தத்தே னருந்தினராகி
மோனந்தனையே முற்றுறச்செய்யும்
பெற்றித்தாய பேரருட்பாக்க
டெற்றெனவோதுஞ் செந்நாவள்ளலார்
தன்னகமிற்றென வுன்னவெண்கலையால்
விளக்கிக்காட்டுங் களக்கமில்வள்ளலார்
மண்ணொன்றுகடமுத லெண்ணிற்பலபோல்
உன்னுயுயிராய் வானாய்நிலனா
யனலாய்வளியாய் புனலாய்ப்பெண்ணா
யாணாயலியாய்க் காணாக்காகஷியா

யெல்லாந்தானு யில்லாததுவாய்
நேசித்தெனது நினதென்றொழியாப்
பூசல்கொளச்செய் பொருளாயருளா
யெங்கும்வியாபித் தேகமாய்நின்று
தங்கச்சபையிற் றனிநடங்குயிற்று
மொருநின்மலன்வா ழிருதயவள்ளலார்
எல்லாவுயிரினு மிரக்கநனிமரீஇக்
கொல்லாவிரதங் கொண்டவள்ளலார்
உலகோருயிர்க்கொலை யொருங்கொழித்தின்புற
இலகாப்பெருந்தவ மிற்றெனவினிதாம்
பலசாத்திரத்தின் பயனைத்திரட்டி
நலபோதகந்தரும் ஞானவள்ளலார்
உறவும்பகையு மொப்பநோக்குந்
துறவுபூண்ட தூயவள்ளலார்
சத்தாஞ்சைவ சன்மார்க்கத்தரு
வித்தாரங்கொடு மேலாத்தழைப்ப
முன்னாளுதித்த நன்னூல்வருமே
இந்நாளோருரு வெடுத்தனரோவென்
றெண்ணியெண்ணி யிறும்பூதெய்தும்
புண்ணியமெய்யை நண்ணும்வள்ளலார்
திருமறைமுடிபிற் றிகழ்செம்பொருளைத்
தெருவியளந்திடுந் தூய்மதிவள்ளலார்
ஐம்புலக்குறும்பாம் வம்பினையடக்கி
யாறுதார வடுக்கிவர்ந்தப்பாற்

பேருப்விளங்கொளிப் பிழம்பைக்கண் ணுறீஇச்
சகந்தோன்றாது சுகம்பெறும்வள்ளலார்
மோனசத்தி முயங்கியேழ்வெளியினும்
ஞானசித்திகொ ணாதவள்ளலார்
என்னுமிராம லிங்கவள்ளலார்
தன்னைப்பாடெனச் சாற்றச்சுட்டி
நிட்டைநினைவிலக் நெறியைக்கடைப்பிடித்
திட்டமருதிய லிசைநாடகமெனு
மிம்மூன்றுவிராஅ யினிமைபயத்தலிற்
பெம்மானவநடம் பிறங்கமும்மூன்றும்
வண்ணங்காரண காரியவியலாற்
றிண்ணந்தேர திறவறிவோர்கள்
சும்மாதிருக்குந் தூய்மையைக்காட்டி
சும்மாவிருக்குஞ் சுகந்தருவித்தலின்
மருளையகற்றியின் னருளைவிளக்கலின்
வாரியின்றோன்றா மாமருந்தேயோ
வீரியந்தோன்றுமெய் வித்தமேயோ
காண்டக்கருந்தூண் டாவிளக்கேயோ
யாதோவுவமை யென்றறிந்தகட்
காதோன்கண்டுடல் காலாய்கோணிமு
னிற்பநாணுறீஇ நிலம்போயொளிப்ப
ஆறந்தமேலா மகப்பொருளநுபவ
வீறெலாமமைந்த வெண்பாவந்தாதி
யற்புதப்பதிகமா னந்தக்கண்ணியென்

ஒருருநூல்மூன்றிங் கொருபதாமழகு
மொருவாதிலங்க வுரைத்தனன்புலவ
ரன்னவனெவனெனிற் பன்னுதுங்கேண்மின்
பிடிநடைமடவார் பிரசங்கூர்மலர்க்
கொடிபடர்தடத்திற் குடைதலினலைகள்
வெள்வளையுயிர்த்த தெள்ளியமணிகளை
யள்ளியள்ளி யாண்டுறு மணைமிசை
யெறிந்திடவவைகள் செறிந்துநகைப்பதை
யம்பரநெகிழ வளகஞ்சோர
விம்பராட்டயரு மெம்முருவனைத்துங்
குலைதான்கண்டு குறுநகைசெய்வதென்
றிலைவேல்விழியா ரெண்ணிவெகுண்டு
மீமிசைப்போந்து மிதிப்பான்கடுப்பத்
தாமிசைந்தேறித் தண்ணொளிவிரிக்கு
மத்தரளங்கடொட் டத்தத்திருத்தித்
தத்தமூரற்குச் சரிபார்த்தொவ்வா
திருப்பக்கண்டிகழ் மருக்குழலாரொடு
சீரணவிடுமெழிற் காரணப்பட்டி
லேய்ந்தவன்பைந்தமி ழாய்ந்துதேர்ந்தவன்
அரனைப்பண்ணொடு பாவிடவல்லவன்
விழிமணிநீருடு தமிழியவங்கன்
கற்பனகற்று நிற்பவனந்நெறி
யம்புவிதன்னி லெம்பெருமக்கள்
தொண்டில்வழாதோன் கண்டனமொழியான்

முன்னர்க்கிளத்திய முதிரறிவாலே
தன்னைத்தானே தரிசனஞ்செய்யுஞ்
சுத்தவித்தக வுத்தமவண்ணலைக்
குருவாக்கொண்டப் பெருமான்மலரடி
சித்தஞ்சிரத்தினும் வைத்துப்பழிச்சுவன்
அற்பமுங்கல்வி யறிவில்லாமல்
புற்புதவாழ்வே பொருளென மதித்து
நானென்று நாத்திகம்பேசு
நாநாணடைந்து நடுங்கச்செய்வோன்
சன்மார்க்கசாதகஞ் சகத்துளோர்தேர
நன்மார்க்கநவிற்றும் நல்லிசைப்போதகன்
பொருந்துமன்புந் திருந்தியஞானமு
மொழுக்கமும்வாய்மையு மொப்பில்சாந்தமும்
பழுத்தசைவப் பத்தியடக்கமுங்
கற்றோர்கேண்மையுஞ் சொற்றேராண்மையும்
பிறநலன்மற்றும் பிறங்கவுற்றோன்
சுந்தரசுகுணத் தோன்றல்
கந்தசாமிப்பேர்க் கவிவல்லவனே.

### சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்

### பண்டித மித்திர யந்திரசாலாதிபருமாகிய

## ஈ-இரத்தினவேலு முதலியாரியற்றிய

### வெண்பா.

நற்குருவி ராமலிங்க நாதன்மே லற்புதமாய்ச்
சற்குருவெண் பாவாதி சாற்றினான்—சற்குருவின்
தாண்மலரை யேபொருளாச் சார்சமர சப்பஜனை
மான்கந்த சாமிமகி பன்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்-இராமலிங்கசுவாமிகள்

# சற்குருவெண்பாவந்தாதி.

## விநாயகர்.

சீர்சான்ற சுத்தசிவ சித்தாந்தத் தார்மேபாற்றுந்
தார்சான்ற ராமலிங்க சற்குரவ—னேர்சான்ற
வெண்பாவந் தாதி விளம்பெனலா ஐங்கரநின்
கண்பார்த்தன் முற்றுங் கடன்.

## முருகக்கடவுள்.

கடம்பணியுங் கந்தா கதிர்வேலா ஞானத்
திடம்பணிநல் லோர்க்கருளுந் தேவா—மடம்படுமென்
வெவ்வினைதீர் மெய்க்குரவன்வெண்பாவந் தாதிசொலச்
செவ்விதிசெய் விப்பதுநின் சீர்.

## நூல்.

சீர்மேவு ஞானத் திருவொளியாய் மெய்யிலங்கு
பேர்மேவு மின்பப் பெருவெளியாய்ப்—பார்மேவு
முத்தமர்க்குந் தோன்று தொளிர்கின்ற ராமலிங்க
வித்தகநான் காண விளங்கு. (க)

விளங்குகின்ற பல்விடய வேதனையா லென்றுங்
களங்கமுற்ற நெஞ்சக் கடையேன்—றுளங்கலறு
மன்பர்பணி ராமலிங்க வாரியனே நின்னுபய
வின்பபதம் போற்றவரு ளின்று. (உ)

இன்றிருந்தார் நாளை யிறப்பார் விலக்கொழியா
தென்றிருக்கா திப்பெருநூ லேத்தலா—னன்றிதைநீ
ரெள்ளாதாய்ந் துய்மின்க ளென்றருளி ராமலிங்க
வள்ளால்மெய் வாழ்வருளு வாய். (௩)

வாய்மையிலார் கூட்ட மறந்துமதி யாமனல்லோர்
தூய்மைபெறுஞ் சீர்புகலுஞ் சுத்தருடன்—மேய்வுற்
றிருட்பிணி தீர்க்கவர மீவார் மனனே
யருட்பிர காசவள்ள லார். (௪)

ஆர்தருவார் சுத்தவுட லாதியவை மூன்றுமென [மோ
வோர்தருபே ரெண்ணங்கொண் டுற்றேறக்கச்—சீர்தரு
ராறந்த மேலா மருட்பா வருள்குருவே
பேறந்த நாளெனக்குப் பேசு. (௫)

பேசுமல மைந்தும் பெறுதுன் னருள்மணந்தான்
வீசுமகத் தாலென் வியனிலையைத்—தேசுபெறத்
தந்தாள்வாய் ராமலிங்க தற்பரனே சற்குருவே
யெந்தாயே யென்றந்தை யே. (௬)

தந்தையென்று கொண்டாடுஞ் சற்புத் திரமார்க்கஞ்
சிந்தைகொண்டு தந்தாண்டாற் சீருலகி—னிந்தையிலாப்

பேறடைவேன் ராமலிங்க பெம்மானின் பாதமன்றி
வேறடைவே தில்லை விதி. (௭)

விதிமுற்றும் விட்டு விலக்கே புரியுஞ்
சதியுற்ற மாந்தரெலாந் தாழ—மதிபெற்ற
வுத்தமர்கள் மேன்மேலு மோங்க விராமலிங்க
சித்தகுரு வேயினருள் செய். (௮)

செய்வினையைக் கூறிற் சிறியோர் பலருக்கும் [யை
பொய்வினைநல் லோர்சிலர்க்கும் போராட்ட—மெய்வினை
யேசியிடு மிவ்வுலகி லென்செய்வேன் ராமலிங்க
தேசிகநீ செப்போர் திறம். (௯)

திறமாங் கயல்விழியார் செய்கையொரு காலே
மறமாங் கொலைபுலைசெய் வார்கூட்—டுறவுமற்று
நித்தமொத்தென் னைக்கெடுத்த நீதியோ ராமலிங்க
வத்தவத்துன் பந்தீர்த் தருள். (௧௦)

அருளுருவோ டென்னைவலிந் தாண்டோய்க்கென் னாவி
பொருளுடலுந் தந்தாலும் போதா—தெருளுடையோ
னென்னநடித் தேனிதுவு மேன்றுகொண்டாய் ராமலிங்க
மன்னவெனென் பேனுன் மனம். (௧௧)

மனமென்சொற் கேட்கின் மகத்தாம்பே றெல்லா
முனதன்பா லிக்கணமே யுண்டா—மினமென்ன
வித்தா ரணியிலெனக் கெந்தா யிராமலிங்க
சித்தா மனமயலைத் தீர். (௧௨)

தீரத் துறந்தோர்தஞ் சீர்புகழுந் தொண்டரடி
யாரத் தலைக்கணிவார்க் கன்பருடன்—சேரற்கே
அற்பமுமீ டில்லேனே யானாலும் ராமலிங்க
தற்பரநீ யாளத் தகும். (௧௩)

தகுந்த தருணமென்று சாற்றி யனையிற்
புகுந்து மறைந்த புதுமை—மிகுந்தகர
வித்தகமா மென்னில் வியக்தியெந்நாள் ராமலிங்க
வித்தகநான் றேற விளங்கு. (௧௪)

விளங்குலக போக விடயமசத் தாகத்
துளங்குமெனிற் றுன்பந் தொலையுங்—களங்கமிலாப்
போதமுன்னைச் சாருமெனப் போதித்தாய் ராமலிங்க
நீதவென்னுட் டோன்ற நினை. (௧௫)

நினையா நினைவென் னிலையெனவே சொற்ற
வுனையா னிரவுபக லுன்னும்—வினையாண்டு
மெற்குருவ மாக விசைவிப்பாய் ராமலிங்க
சற்குருவே நின்றாள் சரண். (௧௬)

சரணடைவோர் தாபமெலாந் தாக்குந் தகவோய்
மரணமிலா வாழ்க்கை வணமுங்—கரணங்கள்
சீவான்மச் சீருந் தெரித்ததுபோல் ராமலிங்க
தேவாவென் னுள்விளங்கத் தேர். (௧௭)

தேரே னெனினுந் தெரிந்தவன்போ லேநடித்து
நேரே புகழடைந்தே னிலத்தில்—யாரேனு

மெத்தனென்போ னுண்டோ விரங்கியருள் ராமலிங்க
வத்தநின்பேர் கொண்டாட லால். (க௮)

ஆலடியி னல்வருக்கு மாழ்வாரி யுண்டமுனி
மூலர்முத லோர்க்கு மொழிந்ததுவு—மேலறியும்
பொற்பார் சிவஞான போதமன்றே ராமலிங்க
சற்பாத் திரவெனக்குச் சாற்று. (க௯)

சாற்றுங் கொடுமையுறுந் தாமதப்பேய் கொண்டென்னை
வேற்று விகார விடயத்திற்—றேற்றமிகு
வீரியமா யாட்ட மெலிந்தே னிராமலிங்க
வாரியனே யாண்டருளன் பால். (உ0)

அன்பாம் பொருள்கொண் டடியேன் வரும்வழியிற்
றுன்பாரக் கொள்ளைகொண்டார் துன்மார்க்கர்—நின்பாலி
விண்ணப்பஞ் செய்துகொண்டேன் வித்தகவி ராமலிங்க[ல்
பண்ணவநீ யாளப் பரம். (உக)

பரநெறியும் பாசப் பசுநிலைபு மேலாம்
வரன்முதலா யுற்றநெறி மற்றுங்—திரமுறவே
நிற்குநெறி யெற்கருள னின்மலவி ராமலிங்க
சற்குருநின் றுட்குரிய தாம். (உஉ)

தாமேயிங் காள்வதற்குச் சற்குருவாத் தோன்றியய
ஞமேவுஞ் சத்தி நலங்காட்டிப்—பூமேற்
றெருட்பெருஞ் சித்தெல்லாஞ் செய்தருள்வார் நெஞ்சே
யருட்பெருஞ் சித்த ரவர். (உ௩)

அவமார்க்கந் தீர்க்கு மருட்கடலே சாகாத்
தவமார்க்கந் தந்தருளுந் தாதா—சிவஞானம்
பெற்றவர்கள் வாழ்த்தும் பெரும விராமலிங்க
நற்றவவென் பேனென் னலம். (உச)

நலமேவ யாவருநின் னல்வடிவைக் காண
நிலமே லெழுந்தருளு நேர்ஞ்—சொலமேவுஞ்
சொப்பனமெந் நாட்கிடைக்குஞ் சொல்வா யிராமலிங்க
வப்பவிதென் பேராசை யாம். (உரு)

ஆங்குணத்தார் நின்னடிய ராங்காங்கு கூடிநின்சீர்
பாங்குபெறப் பாடுகின்றார் பாவியேன்—றீங்குபெறு
மாதர்வசப் பட்டுழன்று வாடுகின்றேன் ராமலிங்க
மாதவவீ தென்னென் மதி. (உசு)

மதிபலவுஞ் சொல்லி மனஞ்செல் வழியே
சதிபலவுஞ் செய்புஞ் சழக்கன்—கதிபெறுமா
றெப்படியோ நின்சித்த மெந்தா யிராமலிங்க
வப்பவிதே கால மறை. (உஎ)

அறையுங் கலையி னகப்பொருள்க டேறு
நிறையும் பெரியரல வென்றாய்—முறையுளவின்
பொற்புறவென் பாலருள்வாய் புண்ணியவி ராமலிங்க
வற்புதநின் னேர்கருணை யால். (உஅ)

கருணையான் மெய்யென்னுங் காயமதை மெய்யாம்
பொருணையாச் சித்தி புகன்றே—மருணையச்

செய்வித்தாய் ராமலிங்க தேசிகனே பவ்வணமே
யுய்விக்கக் கொள்வா யுளம். (உகூ)

உளத்தினிதம் பொன்னைமதித் துள்ள வுலோப
வளத்தரிடஞ் செல்லாத வாழ்வு—விளக்கமுடை
னையமெடுப் போர்க்கிலையென் னுவியல்பும் ராமலிங்க
வையவடி யேற்குத்தந் தாள். (௩0)

ஆளுடைய பிள்ளையா ரம்பொனடிப் போற்றவைந்தா
நாளுடைமை யென்றே நவின்றிட்டாய்—கோளுடைமை
கொள்ளா தெனையாண்டு கொண்ட விராமலிங்க
வள்ளா லதன்சீர் வழுத்து. (௩க)

வழுத்தற் கரிய மனுவுடலைப் பெற்றோர்
கொழுத்துண்டுறங்குவதைக்கொண்டாற்—பழுத்துவிழும்
வேதனையான் மெய்யென்று மெய்யுரைத்தாய் ராமலிங்க
நாதவழி யாததனை நல்கு. (௩உ)

நல்குதலுக் கெண்ணிறந்த நாளா யெனைய்ழியா
நல்குரவொன் றாலே நடுநடுங்கி—யொல்குதலோ
டங்கமெலா நைந்தே யடுத்தே னிராமலிங்க
புங்கவவென் றுன்புதனைப் போக்கு. (௩௩)

போக்கின்மெய் வீடும் புகழ்பொருளுங் காப்பறிவுந்
தேக்கின்மூ வில்லுஞ் சிரத்தைநட்பு—மாக்கிவருந்
திண்ணமுறச் செய்வாய் சிதம்பரவி ராமலிங்க
பண்ணவவீ தென்னுடைய பற்று. (௩௪)

பற்றுனக்கொன் றுண்டு பரிகரிப்பேன் றன்புகொளா
துற்றிருப்பா யென்று யுடன்கண்டேன்—சற்றுணர்ந்துஞ்
சொற்குறியோ னில்லேனென் சொல்லே னிராமலிங்க
சற்குருவே யுன்றன் றரம். (௰ரு)

தரமன் றுணரிற் றரணியெலாந் தோற்றுந்
திரமன் றறிவையெனத் தேற்றிப்—பரமொன்றப்
பண்ணவெண்ணி நந்நிலையைப் பாலித்தாய் ராமலிங்க
வண்ணமென்றன் றன்மை யறிந்து. (௰சு)

அறியாமை நீங்கி யறிவா யறிவுக்
கறிவாகி யவ்வறிவுக் கப்பாற்—பிறிவற்ற
வத்துவிதா னந்த மருள்வா யிராமலிங்க
சத்துவனே யித்தருணந் தான். (௰எ)

தானந்த நாளிரங்கித் தன்மையிலேற் கொன்றுகொடுத்
தூனந்த விர்க்கவெவ்வா றெவ்வியதோ—தானந்த
மில்லவனென் றேத்து மியல்புடைய ராமலிங்க
வல்லவவென் னேயுன் மனம். (௰அ)

மனமாயை கொண்டு மதிவினையி னூலுந்
தினமாழ்கித் தீவினையே செய்யக்—கனவிடத்துந்
தூண்டமிகுந் துன்புற்றுத் தூயோ யிராமலிங்க
வாண்டவநின் றாள்பணிந்தேன் யான். (௰கூ)

யானெனதென் னுஞ்செருக்கை யீர்த்தென்னை யாட்கொள்ளுங்
கோனெனவுட் கொண்டேன் குறைகளெலாம்—வானெனவே

மெத்தவுநின் பாலுரைத்தேன் மேதகவி ராமலிங்க
வித்தகநின் சித்தமினி மேல். (௪௦)

மேன்முகங்கொள் ளென்றபடி மேவவருள் வித்தகவென்
பான்முகங்கொண் டென்றனருட் பாவென்னு—நான்முகப்பி
னாற்றிருபத் தெட்டா நுவலும் பதப்புகழைப்
போற்றிருபற் றென்றும் புகல். (௪௧)

புகலுவதென் குற்றமெலாம் பூரணநின் பாலி
லகலுவதற் காமென் றறிந்தே—யிகல்வதிலாச்
சிலர்பணிந் தேத்துஞ் சிதம்பரவி ராமலிங்க
மேலவனே யாள்க விரைந்து. (௪௨)

விரைந்தெனையன் றாண்டுவந்த வித்தகனே யென்று
கரைந்துநினைந் துங்கனவிற் காணேன்—திரைந்தெனுடல்
மண்ணார லாகா வகைகொளுமோ ராமலிங்க
வண்ணாநின் னுள்ள மது. (௪௩)

அதுவிதுவென் றன்றென் றறியவொணா வாற்றாற்
பொதுவதுவென் றோரார் பொருளைப்—புதுமையுற
வெண்ணாதே சும்மா விருவென்ற ராமலிங்க
கண்ணாளா தேற்றக் கலை. (௪௪)

கலையுரைத்த கற்பனையே கற்றவருக் குண்மை
நிலையுரைத்தற் கெத்துணையு நேரா—நிலையறியுந்
துங்கருக்கே யன்றியெனச் சொற்ற விராமலிங்க
புங்கவனே நாவே புனை. (௪௫)

புனைவதுநீ றக்கமணி பூண்பதுமெய் யன்பி
னினைவதுநின் சீரடியே நித்தம்—வினையொழிக்கக்
கற்றவரின் பாங்கிதெனக் கண்டே னிராமலிங்க
நற்றவனே நான்பொருந்த நாடு. (௪௬)

நாடுநடு நாட்டத்தை நாட்டியெனை வாட்டுகின்ற
கோடுபடு வன்மனத்தைக் கூட்டியென்னோ—டீடுபடச்
சேர்த்தாள வல்லவரார் சித்தகுரு ராமலிங்க
தீர்த்தாவி துன்றன் றிடம். (௪௭)

திடம்பெறுமோர் ஞானத் திறமுன்பு காணாற்
குடம்புறவே நின்றந்த வொன்றைச்—சடம்பெறவே
காட்சியதாய்த் தோற்றுவிப்பாய் கற்பகவி ராமலிங்க
மாட்சியனே யென்பான் மகிழ்ந்து. (௪௮)

மகிழ்கொண் டயன்விதித்த வாணா ளொழிந்தாற்
றிகில்கொண் டிடநடுவன் செய்வான்—முகிவென்று
வேதனையே கொள்ளாதீர் மெய்த்தவவி ராமலிங்க
நீதனுளை யாய்வீர் நிசம். (௪௯)

நிசமிலா நாயேன்முன் னீடுலகிற் றோன்றி
விசனமெலாம் போக்க விதித்த—வசனமுதை
யாதரவாக் கொண்டே யருள்வாயி ராமலிங்க
மாதவநின் வாசமகி மா. (௫௦)

மாதுறையு மாமதியு மான்மழுவு மாசடையு
மாதுறையு மாபணியு மாவுரியு—மாதுறையுஞ்

சங்கவிழி யுங்கரந்து சற்குரவ னாகவந்தோ
னெங்க ளிராமலிங்க னே. (௫க)

இராமலிந்த மாந்த ரிறப்புண்டென் றேங்கி
யிராமலிங்கு வாழுநம தீச—னிராமலிங்க
சற்குருவாய் வந்தருட்பா தந்தான் மனனேயந்
நற்குருநூ லென்னறிவே னன். (௫௨)

நான்செய்த குற்றமெலா நாடியிவ னிவ்வளவு
மேன்செய்தா னஞ்சி ரெழில்பெறவே—தான்சினங்கொள்
ளாதவையெல் லாஞ்சொலித்தன் னன்பருடன் ராமலிங்க
வாதவனின் பங்கொள்ளு வான். (௫௩)

வான்வாய் மருத்தில் வயப்படுமென் பஞ்செனச்சொற்
றேன்வாய் மலர்க்குழலார் செய்கையெனுங்—கான்வா
யடுத்தாழ்ந்தேன் ராமலிங்க வாரியனே யன்பிற்
றடுத்தாள்வா யச்சஞ் சலம். (௫௪)

சஞ்சலங்கொண் டேடங்குந் தமியேற் குளமிரங்கி
யஞ்சலென்று னின்னருளுக் காகாதோ—துஞ்சலுறுச்
சிரியலே நல்குஞ் சிதம்பரவி ராமலிங்க
வாரியனே மூவாசை யால். (௫௫)

ஆசையிலார் நெஞ்சகந்தோ யற்புதனே யன்புகொண்டு
பூசைபுரி வோர்க்கருளும் புண்ணியனே—மாசைகொண்டு
வேசிகளைச் சேர்ந்து மேலிவடைந்தேன் ராமலிங்க
தேசிகனே நிற்கபயர் தேற்று, (௫௬)

தேற்றுவார் நின்னைவிடத் தீவினையேற் காருமிலை
தூற்றுவார் மற்றவர்பாற் றுன்புறாயேன்—போற்றுகின்ற
நல்லவர்க்கும் பொல்லவர்க்கு நன்கருளி ராமலிங்க
வல்லவனே யெற்கருளு வாய். (௫௭)

வாய்நிறைந்த பொய்யுரையு மாணிறைந்த செய்கையுந்தீ
வாய்நிறைந்த நெஞ்சகமும் வாய்ந்துற்றேன்—றாய்மை
பத்தர்பணி யும்பதித பாவனவி ராமலிங்க [நிறை
நித்தவெனை யுங்காக்க நேர். (௫௮)

நேரும் பருவமிலா நேரத்தி னின்னருடான்
சாரும் படிசெய்தற் றன்மமோ—கோருங்கா
லீயவரு வாரென் றிசைக்குதே ராமலிங்க
தூயவநீ நட்ட துசம். (௫௯)

துசங்கட்டிக் கொண்டென்னைத் தூட்ட ரறுவர்
வசங்கட்டிக் கொண்டாட்டன் மாண்போ—கசங்கட்டிப்
போமாறே யாடப் புரிந்து மிராமலிங்க
கோமானீ நட்ட கொடி. (௬0)

கொடிகட்டி வீற்றிருந்துங் கோதில் குமரன்
குடிவிட்டு நீங்கல் குணமோ—மடிவிட்ட.
வேதா தியர்போற்றும் விரியவி ராமலிங்க
மேதா வியவென்னின் மெய். (௬௧)

மெய்வகைசேர் வாயும் விதிவகைநேர் செய்கையுமுன்
மெய்வகைதேர் நெஞ்சகமு மேவியிருந்—துய்வகையி

லண்ணவரு நாள்வரையி லாற்றலுறும் ராமலிங்க
பண்ணவநின் சீர்கேட்கப் பண். (௬௨)

பண்ணதுகொண் டுன்புகழைப் பாடவறி யேனமல
விண்ணதுகொண் டுண்ணிற்கு மெய்யறியேன்—மண்ணன
பேதமுறுத் தேகம் பெறுவேனோ ராமலிங்க [லாற்
நாதவெனக் குள்ளறிய நாட்டு. (௬௩)

நாட்டில்விழி யாமனடு நாட்டிலுறங் காதிருக்கும்
பாட்டிலெனை யேபழக்கம் பண்ணுவிப்பாய்—வீட்டினிய
லுற்றவர்கள் வாழ்த்துகின்ற வுத்தமவி ராமலிங்க
கொற்றவவென் பற்றிதெனக் கொள். (௬௪)

கொள்ளுகின்ற பல்லோர்கள் கூறுஞ் சமயங்கள்
விள்ளுகின்ற பொய்ந்நெறியை மேவாம—னள்ளுறையிற்
சித்தாடும் ராமலிங்க தேசிகனே சுத்தசிவ
சித்தாந்த மெய்ந்நெறியைச் செப்பு. (௬௫)

செப்புமுதற் செந்தமிழிற் சித்தாந்த வீரெழுநூற்
கொப்புயர்வொன் றில்லையென்றெ னுள்ளுரைத்தா—யப்
செப்பமா யானறியச் செப்புவாய் ராமலிங்க [பொருளைச்
வப்பவீ தென்விருப்ப மாம். (௬௬)

ஆம்பொருள்க ளெல்லா மடங்கன் முறைதெரிக்கு
நாம்பொருளென் றோது நடையொழிக்கு—மோம்பதை
றுள்ளபடி யேயுரைத்த வுன்னதவி ராமலிங்க [யென்
வள்ளலுன தன்பென் வளம், (௬௭)

வளங்கொண்ட வைந்தெழுத்தான் மாயுமல மைந்தென்
றுளங்கொண்டோர் வெண்பா வுரைத்தாய்—விளங்குவதற்
கெந்தநாட் காட்டுவிக்க வெண்ணுதியோ ராமலிங்க
வந்தணு நாயேற் கறை. (௬௮)

அறையுந் தலமுதன்மூன் றுலாம் பயனை
யுறையுந் திருமுன்ன ருற்றுன்—முறையுடனென்
றுத்தமரு ரைத்தபடி யுன்னிவந்தேன் ராமலிங்க
நித்தவெனக் கென்றிரங்கு நெஞ்சு. (௬௯)

நெஞ்சகத்தால் வாடி நிலைகுலைந்து புன்மாதர்
வஞ்சகத்தான் மாழாந்து வந்தடைந்தேன்—துஞ்சலுற்ற
பாசமறுத் தென்னைப் பணிகொள்ள ரா[ம]லிங்க
விசநினக் கேகடமை யின்று. (௭0)

இன்றைக்கோ நாளைக்கோ வென்பா லிரங்குதன்மற்
றென்றைக்கோ வென்றெண்ணி யேங்குகின்றே-னன்றைக்
விற்பனர்ப ணிந்தேத்து மேன்மையுறும் ராமலிங்க[கோர்
சிற்பரநின் சித்தமதைச் செப்பு. (௭௧)

செப்புகின்ற காலதிசை தேசங்கள் காணுமெனை
யொப்பமுடன் காணவவைக் கொவ்வாதென்—றப்படியி
லென்னையறி வித்துள் ளிருந்தருளி ராமலிங்க
மன்னவனை நெஞ்சே மதி. (௭௨)

மதிகதியென் றெண்ணாத மாந்தர் மரண
விதிசதிரென் றுன்னி விழுவார்—கதியிதுவென்

றெண்ணுரென் மாணவக வென் றுரைத்த ராமலிங்க
வண்ணுநின் போலருள்வா ரார். (௭௩)

ஆரென்று மொன்றுங்கொல் லாதவர்க்குஞ் சொந்தவினைத்
தாரென்று சொற்றபடி யம்புவியி—னீனரென்று
நண்ணுணா யென்னுறவா நாடாமை ராமலிங்க
வண்ணுவே யின்றருளு வாய். (௭௪)

வாயார வாழ்த்த மனமாரச் சிந்திக்க
வேயாது மெய்யா லுவந்துதொழச்—சாயாமெய்த்
தேகசித்தி பெற்றுய்யச் சிற்பரவி ராமலிங்க
வேகசித்த நின்னுளத்தி லெண். (௭௫)

எண்ணு[illegible]மூன் றென்பவெலாங் கற்பனைநா
நண்ணும் பிரமமென நாட்டுவோர்—மண்ணுலகி
லுண்ணமேலன் பேரளியா லுத்தரவி ராமலிங்க
வண்[illegible]மேல யுண்மை யருள். (௭௬)

அருள்வாசம் பெற்றோர்க் கருள்வாத லூர
ரருள்வாச கப்பொருளை யாயார்—மருள்வாயுற்
றெம்மறிவே தெய்வமென வேய்ப்பரென்றாய் ராமலிங்க
செம்மதியோ யென்னுட் சிறந்து. (௭௭)

சிறந்துதிகழ் பத்தர்முதற் சித்தர்கள்வி யக்குந்
துறந்ததிரு மேனிகொண்டு தோற்றித்—திறந்தழைய
வெண்பாபா டென்றுரைத்தாய் விற்பனவி ராமலிங்க
பண்பாவென் றுலென் பயன். (௭௮)

பயனறியா நாயேனைப் பாடச் சிறிது
நயனறிவாச் செய்தபெரு நன்றித்—தயவறியாத்
தன்மையனே னென்னைத் தரமோ விராமலிங்க
சின்மயனே யுன்னோர் செயல். (எகூ)

செயலொன்று வாக்கொன்று சிந்தையொன்றுக்கொண்ட
மயலொன்று மாதர் வடிவி—லயலறியா
துண்ணாட்டங் கொண்டேற்கு முண்டோ விராமலிங்க
வண்ணாவுன் றன்சீ ரடி. (அ0)

அடியு நடுவு மருட்பனைய தாக
முடியுஞ் சிவமே முடியாம்—படியறியச்
சொற்றான்சம் பந்தனெனச் சொற்றா யிராமலிங்க
நற்றாயென் னுள்விளங்க நாடு. (அக)

நாடுநடு நாட்டமதி ஞானென்னும் போதமறக்
கூடுநெறி யென்றெனக்குக் கூட்டுவிப்பாய்—பீடுபெறுஞ்
சத்தர்தொழுஞ் சிவ தயாபரவி ராமலிங்க
வத்தநின ருட்பார்வை யால். (அஉ)

அருட்பார்வை யொன்றே யநித்தசட லக்க
மருட்பாதை மாற்று மனமே—தெருட்சாரும்
விற்பனர்க்கு ழாஞ்சேர்க்கும் வெற்றியுறும் ராமலிங்க
தற்பரனா மென்குருநா தன். (அங)

தன்னிற் றரும்புந்தொந் தத்தசியின் மெய்ப்பொருளைத்
தன்னிற் றெரிந்துதவுந் தன்மைபெறு மென்னினெஞ்சே

பார்பெறமாட் டாதா ரிராமலிங்க தேசிகனூர்
நேர்பெறுமஞ் காசந் நிதி. (அச)

நிதிமறவா துன்னை நினையா திருக்கும்
விதிபறமா யெற்கார் விதித்தார்—மதிதிறமா
யுற்றவரே மெய்த்தவரென் றுண்மையுணா ராமலிங்க
நற்றவனே சொல்வாய் நயந்து. (அரு)

நயந்துசுத்த வித்தைமுத லாதவனைக் கப்பாற்
றயங்குநித்த தத்துவமுந் தாண்டி—யியங்கருளா
லென்னையநின் துள்ளுனைக்கொண் டின்புறவி ராமலிங்க
மன்னவருள் செய்நல் வரம். (அசு)

வரங்கொண்டு முத்தமிழான் மாண்புறுநாற் பாவுந்
தரங்கொண்டு பாடத் தமியேற்—கிரங்குதல்செய்
நேரமிதே வந்தருள்வாய் நித்தியவி ராமலிங்க
வாரமுதே நின்னுள்ள மார்ந்து. (அஎ)

ஆர்ந்தவத்தன் பூசை யதனாற் பசுகரணந்
தீர்ந்தசுத்தஞ் சுத்தமுறுஞ் சீர்யோகந்—தேர்ந்தடங்கும்
பேதமிலா னந்தம் பிறங்குமென்ற ராமலிங்க
நாதவருள் வாயந் நலம். (அஅ)

நலனருளும் பொற்சபையை நாடியமுதாரும்
பலனருளுஞ் சிற்சபையைப் பற்றாய்—சலமறுத்து
மேலா மநுபவத்தின் மெய்யிதென்ற ராமலிங்க
சீலாவெ னுள்விளங்கச் செய். (அகூ)

உளவெவையுஞ் சித்தாந்தத் துள்விளங்கு மென்னு
முளவுமுறை யாறி னுணர்த்தி—யளவளவா
நற்பதமே காட்டியதி னூட்டுவித்த ராமலிங்க
சிற்பதனே வாழ்கவுன்றன் சீர். (௧0௧)

முற்றும்.

---

வாழியெனைப் பாடென்ற வாய்மைத் திருமலர்வாய்
வாழியெனக் கின்ப மலர்கண்கள்—வாழியருள்
வாழிகுரு ராமலிங்கம் வாழியருண் மெய்யடியார்
வாழிசுக மார்க்க வழி.

---

திருவருட்பிரகாசவள்ளலார் திருவடியேதஞ்சம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம் - இராமலிங்கசுவாமிகள்

# சற்குரு அற்புதப்பதிகம்.

வெண்பா.

சீர்பதியும் ராமலிங்க தேசிகனார் செய்யகழற்
கோர்பதிகம் பாட வுகந்தருளும்—பார்பதியு
நந்திமுதற் றேவர்பணி நாதர்முதற்புத்திரனாந்
தந்திமுகத் தெந்தைதிருத் தாள்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆய்ந்திடுமனந்தமறையாயிரமுகங்கொண்டளந்துமள
வாதநிலையே, அபுதகற்பங்கொண்டனந்தர்பலரோதவுமட
ங்கவொண்ணாதநிறைவே, ஓய்ந்திடமனப்பரியுகைத்தசிவ
யோகருமுணர்ந்திடற்கரியபொருளே,ஓங்காரநிலைகடந்தப்
பாலுமூடுருவியொளிர்தனிச்சுத்தவொளியே, மாய்ந்திடும்
பூதவுடலழிவுறுமெய்வகைவகுத்தருளுநித்தவெளியே, ம
ருவுதொந்தத்தசியினுயிரருட்சுகமுறைவழங்குமெய்ஞ்ஞா
னமணியே, தேய்ந்தமதவாதியர்க்கணுவுமெட்டாதசிவசிற்

சுகானந்தவமுதே, திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேச திருவருட்பிரகாசனே. (௧)

இடர்புரியுமனமாயைமுப்பாலிழுத்திடவிளைத்து மிக நொந்துவாடி, இனிவருகணத்தில்வினையெவ்வணமிழுக்குமோவெண்ணமேதாய்முடியுமோ, படர்மூலவினையெவணிழுக்குமோவென்றேபயந்தசிறியேனாயினேன், பலகோடியண்டப்பரப்பிற்பெறற்கரியபண்புடையவிந்தவுடலைச், சடமநித்தியதுக்கமெனவிகழ்ந்தேவிடச்சம்மதஞ்சிறிதுமில்லேன், சமயங்கடந்தமெய்ஞ்ஞானமணிமன்றந்தனைத்தெரிந்தின்புறுவனோ, திடலானவெளியிலுத்தரஞானசிற்சபைதிகழ்ந்தோங்கவருள்செய்தெருளே, திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௨)

நான்மறையினாலேலழினந்தமறியாதுவாணாள்கழிவதற்கழுவேனோ, நாவலிமைகொண்டுபெரியோரைநிந்திக்கும்வெறிநாய்களைநினைத்தழுவேனோ, மான்விழிப்பெண்மயலுமண்பொருட்பன்மயலுமாறாததற்கழுவேனோ, மாபாவியானபழிகாரரைக்கண்டஞ்சவரும் வாதனைக்கழுவேனோ, ஊன்றினுங்கொடியர்பாழ்மதமின்னுமிவ்வுலகி லொழியாததற்கழுவேனோ, உன்பேரருட்கருணைமொழிவழிநிலாதவென்னுளமதைநினைத்தழுவேனோ, தேன்மருவுமாறுமுறையருளுநின்றிருமுகந்தெரிசியாமைக்கழுவேனோ, திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௩)

மனமானபாவியென்வசமாக நானுனதுவசமாகநிற்கவறியேன், மாறியொருவேறுவழிபோகமதியின்றியம்மாயைக்குளடிமையாகி, வனவேடனாவர்பின்சென்றுவாணாளெலாமறலிநாளாகநின்றேன், வலியவினையேசெய்தகொடியனென்றென்னைவிதிவழியிலேவிடிலெளியனேன், கனமானநினதுபயமலரடிநிழற்கண்கலந்தாடிநிற்பதென்றோ, கலையளந்தறியாதமேனிலைகடந்தமெய்க்காட்சியே கருணைநிறைவே, சினமாதிகாமமயல்செற்றவருளத்திலமர்சிற்சொருபமானபரமே, திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௪)

நிந்தையேவிரதமாக்கொண்டவெறு வீணர்தமைநேசித்திடாமைவேண்டும், நினைவோடுமறதியுமிலாது நடுநிலைநின்றநித்தருடனமரவேண்டும், வந்தவகையறியாத வம்பர்தமையெஞ்ஞான்றுமருவாதிருத்தல்வேண்டும், வலியவூழென்கின்றவறியாமையைக்கொன்றமதியாளருறவுவேண்டும், சிந்தையினிலொன்றுமேலொன்றுமுறுபதகரைச்சேராதிருத்தல்வேண்டும், தினகரன்போலென்றுமழியாதமுத்தேகசித்திபெற்றிடுதல்வேண்டும்,செந்தழன்மேனியுருவாகியுமறைந்துமேற்றிகழ்கின்றவெளிவடிவனே, திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௫)

பாமாலைகொண்டுபாடாதவாணாளெலாம் பாழென்றுரைத்தபடியால், பாதபங்கேருகங்கருதிநின்றிருவருட்பாவையன்போடுபாடிற், சாமாறொழித்தரியசுத்தசிவசன்மார்க்கசங்கத்திலொருவனாகத், தமியேனையென்றுகொள்ளத்

தருமெனத்தினந்தவறுதுபாடுகின்றேன், நாமாவளிப்புகலநாயினேற்கருள்செய்தநாடகவிசித்ரமறியேன், நான்கொண்டவிரதமிந்நாண்முடியவேண்டுமெனநாடியழுதலறுகின்றேன், தேமாலைகொண்டப்புறப்புறத்தினினின்றுதேவர்களெலாந்துதிக்குந், திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௬)

சென்னையொற்றிக்கருங்குழியைக்கடந்து மேற்சித்திபுரநாட்டிவடலிற், செத்தாரெழுந்திடுவர்கைத்தாளமிடுமெனச்செப்பிமறைவுற்றமகிமை, என்னையோவென்றறிதரஞ்சிறிதுமில்லாமலெளியேன் மயங்குகின்றேன், எனையீன்றவன்னையேயென்றனித்தந்தையே யென்னையாட்கொண்டகுருவே, துன்னியபெருங்கருணைவடிவானதெய்வமே தூயருளமேவுபரமே, சொன்னபடிசித்தெலாமென்றுவடலூரெனுந்தூயபதியிற்செய்குவாய்,சின்னவயதினிலுத்தியோகமீகுதுமென்றதிருவார்த்தையென்றுமறவேன், திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (௭)

அரவணையிலமர்பவனுமயனுமிந்திரனாதி யமரர்களுமறியவொண்ணா, அற்புதமுறுந்துரியவெளிநிலைகடந்துமேலந்தவெளியுறுநிலைகடந், திரவுபகலில்லாதபரநாதவெளிகடந்தியல்பரமவெளிநடுவிலே, யிலகிவிளையாடிசிவசத்தியருளமுதுண்டினித்தபரஞானகுருவே, தரமிகும்பக்குவமிகுந்தவாரூடரைச்சார்ந்துயோகாப்புனலையுஞ், சாகாததலையையும்வேகாதகாலையுந்தமியனேனுணர்வதென்றோ, திர

மானவொருமொழிதெரித்திடப்பெற்றுளோர்தினமும்வ
ணங்கியேத்துந், திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதி
ருவருட்பிரகாசனே. (அ)

நாலாறினீராறினுருவதெரிசனசுத்திநானறிய நாட்டி
யந்த, நாதவெளிமேலுறும்பரவிந்துபரநாதநன்னிலைகடத்
தியப்பான், மேலானவெளிமூன்றினனுபவமறிந்ததன்மே
ல்விளங்கும்பெரியதோர், வெளியினிறையானந்தவடிவாய்
விளங்கநின்விளைகழல்வணங்கிநின்றேன், பாலாறெனுந்தி
ருவருட்பாவையன்பராம்பைகூழ்தழைத்தோங்கிடப், பா
ரிலருளும்பெருங்கருணைப்ரவாகமேபரஞானபோதபரமே,
சேலார்விழிச்சியர்தொடக்குண்டவென்னை யுஞ்சினமுறுத
ருள்புரிகுவாய், திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிரு
வருட்பிரகாசனே. (கூ)

யான்படுந்துன்பமதையாருடன்சொல்லுகேன்யாதெ
ன்றெடுத்துரைப்பேன், யாவுநின்செயலென்றுணர்ந்திடற்
கறிவிலேன்யானெனுந்தாமதத்தில், ஊன்றடிப்புற்றுநின்
னுபயதிருவடிமறந்துண்பதுமுறங்குவதுமாய், உழவுக்கு
முதவாதவிருகாற்கடா வெனவுலாவுவேன் சத்துவத்தில்,
வான்கலந்திடுமடியர்வாழ்வினை நினைந்துமிகவாடிமனமுரு
கிநிற்பேன், வரல்வேண்டு மென்றுலகர்போன்றலறியழு
மென்வருத்தந்தவிர்த்தருளுவாய், தேன்பால்கயக்கின்ற
திவ்யமதியமுதுண்டசித்தர்களெலாம்வணங்குந், திருவருட்
புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே. (க0)

உய்வகையிதென்றோரணுத்துணையுமறியாத வொதியனேனிற்பெருமையை, உரைத்திடநினைந்திடவுணர்ந்திடச் சிறிதேனுமோர்கிலாக்கடையனெனினும், பொய்வகையிலென்பாலடுத்ததுயர்யாவுமோர்போதினிற்றீப்பஞ்சுபோற், போகவருமெனநினதுதிருநாமமந்திரம் புகலுகின்றேனாயினேன், மெய்வகைபுரிந்திடாப்பாவியிவனுக்கருளல்விதியலவெனத்திருமுனே, மேவிமெய்யன்பர்பலகால்விளம்பிடினுமிவ்வினையேற்கிரங்கியின்றே, செய்வகையுணர்த்தியந்நன்னெறியினின்றிடத்திருவுளங்கொண்டருளுவாய், திருவருட்புரவாசமருவுமுத்தமர்நேசதிருவருட்பிரகாசனே.

---

திருவருட்பிரகாசவள்ளலார் திருவடியேதஞ்சம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.

குருவேதுணை.

முதலெழுத்து வருக்கவண்ணச் சற்றுநாமமாலையென்னும்

# இயற்கையுண்மை

# ஆனந்தக்கண்ணி.

வெண்பா.

சுத்தசிவ சன்மார்க்கந் தொல்லுலகிற் சீர்பெறச்செய்
சித்தகுரு ராமலிங்க தேசிகனை—நித்தமுற
வேத்தற் கிருநூற் றிருபத்து நான்குகண்ணி
யாத்த னெனக் குள்ளிசைவித் தான்.

இராகம் - யமுன்-தாளம் - ஆதி.

அன்பே வடிவருளுயிரின்புணவெனவமர்ந்தருள் ராம லிங்கம், அற்புதத்திருவருட் பிரகாசவள்ள லாரெனும்ராம லிங்கம். (க)

அருளேமுடிநடுவடியறிவிடம்பதி யாமெனும் ராம லிங்கம், அருள்பெறிற்றுரும்பு மைந்தொழில்செயு மென வருளறமருள் ராமலிங்கம். (உ)

அருளல தணுவசை யாதெனவருட்டிற மறிந்துரை ராமலிங்கம், அருட்பெருஞ்ஜோதியென் றுண்டவனம்பலத் தானெனும் ராமலிங்கம். (௩)

அருவினுள்ளருவாமருவரு வருவெனு மடைவருள் ராமலிங்கம், அருள்வடிவழியாத் தனிவடிவருணிலை யறம ருள் ராமலிங்கம். (௪)

அண்டபிண்டமுதித்தொடுங்கு மிணையடியென் றகத் துரை ராமலிங்கம், அன்பொன்றின் பொன்றளித்திடு மடி யென வருளிய ராமலிங்கம். (௫)

அண்டத்தகிலத்துரிசடக்கிடும்வகை யளித்திடும் ராம லிங்கம், அங்கமிலிங்கமெனத்தெரியுருவரு வடைவருள் ராமலிங்கம் (௬)

அகரத்துக்கறுபத்துநான்கிலக்கணவகையருளியராம லிங்கம், அடங்கன்முறைதெரிவாரடங்கலுமறி வாரெனும் ராமலிங்கம். (௭)

இராகம் - சாமா.

ஆன்மசுத்தியுமருட்ஜோதியுமாக்குவ தடியெனும்ரா மலிங்கம், ஆறுறையுமதற்கப்பாலையுமறி யடியருள்ராம லிங்கம். (௮)

ஆறத்வாவொன்றப்பாலொன்றிணை யடியெனும்ராம லிங்கம், ஆறுதாரமீதானத்தருளொளி யசைவெனும் ராம லிங்கம். (௯)

ஆன்மபோதந்தொலைத்தவருளம்விடையென வறை தரும்ராமலிங்கம், ஆவரணங்கடந்தேழ்வெளியுளதென் றருளியராமலிங்கம். (க0)

ஆதியுமந்தமுமறிந்தவனாதியென் றகத்துரைராமலிங்கம், ஆய்பவர்வழியெனுங்குடும்பகோஷநூ லருளியராமலிங்கம். (கக)

ஆலநிழற்கணமர்ந்தருள்புரிந்தவவ்வறமருள்ராமலிங்கம், ஆசறுமந்தமிரண்டுஞ்சமமெனு மடைவருள்ராமலிங்கம். (கஉ)

ஆகாயத்தின்மயில்குயிலாயினவிய லருளியராமலிங்கம், ஆக்கத்தினுற்கொடுந்தூக்கமொழியுமெனு மளவுரைராமலிங்கம். (கங)

ஆவியீரைந்தை யபரத்தே வைத்தோதென் றருளியராமலிங்கம், ஆதரவாயமுதாயுனைக்காக்குமென் றகத்துரைராமலிங்கம். (கச)

இராகம் - தேசி தோடி.

இகபரவசுகசுகந்தொடராப்பெரு வியலருள்ராமலிங்கம். இணையிலாவருளலதில்லைப்புகலிட மெனவுரைராமலிங்கம். (கரு)

இலகுமெவ்வுயிருஞ்சிற்சபையாம்பரசிவத் திலுக்கெனும்ராமலிங்கம், இருமூன்றுகோடிசமயத்துஞ்சிவமொன் றெனவருள்ராமலிங்கம். (கசூ)

இருவினையொப்பின்மலபரிபாகத்திலடி யிணையெனும் ராமலிங்கம், இகபரநிலைப்பொருளெனவிளங்கிடுமடி யெனவருள்ராமலிங்கம். (௧௭)

இயற்கையுண்மைவிளக்கமின்பமிதுவிதுவென் றியம் பியராமலிங்கம் இருதலைக்கொள்ளியினியனெறிநிலைவகை யெனக்கருள் ராமலிங்கம். (௧௮)

இருநிதியெழுநிதிநவநிதிமுதலிய வியலருள்ராமலிங் கம், இரவில்வெள்ளம்பரவித்தயங்கிடுநிலையிதென் றிசைத் திடும் ராமலிங்கம். (௧௯)

இடம்வலமிது நடுவிதுவுன் னுள்ளறியென வியம்பிய ராமலிங்கட், இருளொளியான்மயங்கியவெனைநடுநிலை யேற் றியராமலிங்கம். (௨0)

இராகம் - நாதநாமக்கிரியை.

ஈடணைதவிர்த்தநெஞ்சுறைவதுதுறவெனவுரைராம லிங்கம், ஈனமான்மோகினிவிந்துகடந்தவோ ரிடமருள் ராமலிங்கம். (௨௧)

ஈததுவென்றெதையுஞ் சுட்டவொணா விடையருள் ராமலிங்கம்,ஈடழியாப்பெருங்கதிபெறுந்தவமீ தென்றருள் ராமலிங்கம். (௨௨)

ஈரெண்ணிலைமேற்பூரணசுகமெனு மியலருள் ராமலிங் கம், ஈரெழுநூற்பொருளருமையின்றொகைவகையியம்பிய ராமலிங்கம். (௨௩)

ஈங்கிரண்டரைக்கடிகையின்மேல்வரும்விளை விசைத்தருள்ராமலிங்கம், ஈனமறுத்துமெய்ஞ்ஞானவிளக்கையுள்ளேற்றெனும் ராமலிங்கம். (௨௪)

ஈடுகட்டிவருவீரெனிலெய்திடு மின்பெனும் ராமலிங்கம், ஈதேதருணநம்பிறையெழுந்தருள்வதென் றியம்பிய ராமலிங்கம். (௨௫)

ஈகாதலுடையவர்க் காகாததிலையென விசைத்திடும் ராமலிங்கம், ஈசானமேலுண்டுபேசாதமந்திர மெனவருள் ராமலிங்கம். (௨௬)

இராகம் - தனாசரி.

உலகெங்குமருட்பெருஞ்ஜோதியென்றேத்திடற்குள வுரைராமலிங்கம், உண்மையிதென்றெதிர்முகத்தினுந்தோன்றச்செய்தோங்கியராமலிங்கம். (௨௭)

உருவவருவவுருவருவோபாசனை யுரைத்தருள்ராமலிங்கம், உரைமனங்கடந்தவோர்பொதுநெறியிதுவென வுணர்த்தியராமலிங்கம். (௨௮)

உலகுதியொளியின்புறவெளிநிலையடி யுரைத்தருள்ராமலிங்கம், உன்மணியுட்புறமொளிர்வதொன்றோங்குவதொன்றெனும் ராமலிங்கம். (௨௯)

உள்ளிரவிமதியாயுலகுஞற்றுமடியென் றோதியராமலிங்கம், உபரசவேதிபினுபயமுமிதுவென வுரைத்தருள்ராமலிங்கம். (௩0)

உருள்சகடெனுமுளஞ்சலியாவகையெனக் குதவிய ராமலிங்கம், உயிர்க்கிதம்புரிபவரேமகிழ்வடைவரென் றுரைத்தருள் ராமலிங்கம். (௯௧)

உடலுறுஞ்சித்திகளிரண்டாம்பிரிவினிலுரைத்தருள் ராமலிங்கம், உயிருறுமாயையினுறுவிரிவனைத்தையு முணர்த்தியராமலிங்கம். (௯௨)

இராகம் - காம்போதி.

ஊனருந்திடுவோருறவினரன்றென வுரைத்தருள்ராமலிங்கம், ஊழ்வினையாவுமொழித்திடுமெதிரல வுளவருள்ராமலிங்கம். (௯௩)

ஊமைபெழுத்தினுளாமையெழுத்தென வுணர்த்திய ராமலிங்கம், ஊன்றியவேகாக்கரப்பொருளநுபவ முகந்தருள்ராமலிங்கம். (௯௪)

ஊனநடந்தவிர்த்தானநடம்பெற வுவந்துரைராமலிங்கம், ஊற்றையுடம்பிதைமாற்றுயர்பொன்செய வுளவருள் ராமலிங்கம். (௯௫)

ஊக்கம்பெறிற்பவவேக்கங்கெடுமென வுரைத்தருள் ராமலிங்கம், ஊன்றியசேவடிதோன்றிடுநிலையிதென் றுவந்தருள்ராமலிங்கம். (௯௬)

ஊதியமொவ்வொருவகையினும்பெறும்வகையுரைத் தருள்ராமலிங்கம், ஊசலெனும்பவநாசமுறும்பல வுளவுரைராமலிங்கம். (௯௭)

ஊனம்பெறுமுலகோரினிப்படுந்துய ருரைத்தருள்ராமலிங்கம், ஊர்த்துவங்கொடுத்தென் றனுர்த்தியைக்கெடுத்தமு துதவியராமலிங்கம். (௩௮)

இராகம் - தோடி.

என்னைப்பாடவென் னுள்ளங்கலந்துறை யென்குரு ராமலிங்கம், எல்லைகடந்தமேவார் தில்லையின்மருதூ ரிலங்கிய ராமலிங்கம். (௩௯)

என்னுயிருக்குத்தாய்தந்தைசற்குருதெய்வ மெனத்தகும்ராமலிங்கம், எங்கணுஞ்சிவசன்மார்க்கந் துலங்குமினி யென்றருள்ராமலிங்கம். (௪0)

எடுப்பதொன்றின்பங்கொடுப்பதொன்றிணையடி-யெனவருள்ராமலிங்கம், எங்கிருந்தெதுவேண்டினுமருள்வது சிவமென் றுரைராமலிங்கம். (௪௧)

எப்படியெண்ணியதென்கருத்தப்படி யெனக்கருள் ராமலிங்கம், எவ்வழிவேதாகமமுறைநிஜவழியியம்பியராமலிங்கம். (௪௨)

எட்டிரண்டென்பனமுற்படியென்றெனக் கிசைத்திடும் ராமலிங்கம், எழுவகைத்தோற்றத்திலுறுமுயிர்வினைவகையியலருள்ராமலிங்கம். (௪௩)

எங்கேகருணையுண்டங்கேசிவமமர்ந்திடுமெனும் ராமலிங்கம், எல்லாவுயிர்களுநல்லோரெனத்தொழுமென்குரு ராமலிங்கம். (௪௪)

இராகம் - செஞ்சுருட்டி.

ஏகனனேகனென்றியம்பும்வேதாகம வியலருள்ராம லிங்கம், ஏமாசிதசபையகமகப்புறமென வியம்பியராமலிங் கம். (௪௫)

ஏறியிறங்காநிலைதூக்கியகா லியலருள்ராமலிங்கம்
ஏதமிலாப்பரநாதாந்தாந்த மிசைதயெனும்ராமலிங்கம்.

ஏகசிற்சித்தியனேகமெனநிகழு மென்றருள்ராமலிங்கம்
ஏமமிகுந்திருவாமசுகந்தரு மிடமருள்ராமலிங்கம். (௪௭)

ஏகாந்தநன்னிலையோகாந்தத்துள்ளதென் றியம்பிய ராமலிங்கம், ஏகாதகல்வியேசாகாதகல்வியென் றிசைத்த ருள்ராமலிங்கம். (௪௮)

ஏசறுந்திருவருட்செங்கோலோங்கிடு மினியெனும்ரா மலிங்கம், ஏகாக்கரப்பொற்பீடத்தினிலைக்கவோ ரிதமருள் ராமலிங்கம். (௪௯)

எஃகுதலடையாப்பாங்கிதிலிருவென விருத்தியராம லிங்கம், ஏரெழுகோடிமகாமந்திரப்பொருளியம்பியராமலி ங்கம். (௫௦)

இராகம் - மத்தியமாவதி.

ஐந்தக்கரநிலைநெறிவகையைந்தையு மருளியராமலிங் கம், ஐந்துமலங்களும்வெந்துறீமாறிது வாமெனும்ராமலி ங்கம். (௫௧)

ஐவணங்காட்டிடுமெய்வணமிதுவென வறைதரும்ரா மலிங்கம், ஐவகைப்பூதவுடம்பழியாநலவடைவருள்ராமலி ங்கம். (௫௨)

ஐந்தொழிலளிப்பதுகளிப்பதொன்றுமிணையடியெனு ம்ராமலிங்கம், ஐயந்திரிபுமெய்யையமுமறுத்திடு மடைவரு ள்ராமலிங்கம். (௫௩)

ஐவருங்காண்டிடற்கரும்பெரும்பொருளிதென்றறை தரும்ராமலிங்கம், ஐம்முகமாறுமுகத்தின்பொருளிதென் றருளிபராமலிங்கம். (௫௪)

ஐம்புலன்வென்றவுத்தமர்க்கேவாதனை யறுமெனும் ராமலிங்கம், ஐங்கரப்பெருமானிலையுனக்குள்ளிதென் றரு ளியராமலிங்கம். (௫௫)

இராகம் - கமாஸ்.

ஒத்தவிடத்தினினித்திரைகொள்ளெனற் குரைதரும் ராமலிங்கம், ஒக்குமனத்தையுடன்பணிகொள்ளென வுகந் துரைராமலிங்கம். (௫௬)

ஒன்றேசிவமதையொன்றுசன்மார்க்கமு மொன்றெ னும் ராமலிங்கம், ஒன்றினிற்பலவும்விரிந்தவகைக்குள வு ணர்த்தியராமலிங்கம். (௫௭)

ஒன்றலவிரண்டலவொன்றிரண்டலவென்ன வுரைத்தரு ள்ராமலிங்கம், ஒன்றினிலொன்றுளவொன்றிலவென்றத னுளவுரை ராமலிங்கம். (௫௮

ஒருநாழிகையினில்யோகப்பயன்வருமென் றுரைத்தி டும்ராமலிங்கம், ஒருமையினெல்லாவுலகமுமோங்குமென் றுகந்தருள்ராமலிங்கம். (௫௯)

இராகம் - உசேனி.

ஓடாமாயையுள்ளோடாநிலைநெறி யுதவியராமலிங்கம் ஓங்கும்பிண்டாண்டங்கள்தாங்கிடும்பெருவெளி யுரனுரை ராமலிங்கம். (௬0)

ஓலக்கபாடத்தைச்சாலத்திறந்திடு முளவருள்ராமலிங்கம் ஓதாதுணரவுணர்த்திடுமுளவை யுகந்துரைராமலிங்கம்.

ஓமென்பதற்குமுன்னுமென்றாமென் றுரைத்தருள் ராமலிங்கம், ஓங்காரத்துள்ளொளிக்குள்ளொளியிதென் று கந்தருள்ராமலிங்கம். (௬௨)

இராகம் - பைரவி.

ஔதாரியமருள்பெறுமொருவழியென தகத்துரை ராமலிங்கம்,ஔரிதமாதியவறநூற்பொருளிது வாமெனும் ராமலிங்கம். (௬௩)

ஔவியமாதியவெவ்வினைநீக்குத லறமெனும்ராமலிங்கம் ஔடதமணிமந்திரதந்திரநிலை யளவுரைராமலிங்கம். (௬௪)

இராகம் - காம்போதி,

கடல்கடந்தருட்கடற்படிந்துறுமூவகைக் கதியருள்ரா மலிங்கம்,கனகசிற்சபையினிற்கண்டிடலுண்டிடல் கருதெ னும் ராமலிங்கம், (௬௫)

கலக்கமிலாநடுக்கண்ணிடையம்பலங் காணெனும்ராமலிங்கம், கருணையொன்றேகதிபெறுவருத்தமில்வழி கருதெனும் ராமலிங்கம். (௬௬)

கற்பனைமுழுவதுங்கடந்தொளிதருமொன்றைக் காணெனும்ராமலிங்கம், கற்பகமெனவுலகுயிர்க்கிரங்கெழினிலை காட்டியராமலிங்கம். (௬௭)

கரணாந்தியமகமகப்புறவொழுக்கங்கள் கணித்தருள் ராமலிங்கம், கணநிலையவற்றின்கருநிலையனைத்துங் கழறிய ராமலிங்கம். (௬௮)

கருவிகளுடன்சேர்ப்பதுதனிவைப்பது கழலெனும் ராமலிங்கம், கண்டபோதிரவிகொண்டபோதுமதி காணெனும்ராமலிங்கம். (௬௯)

கமலக்கண்குறுகிக்கமலக்கண்விளங்குங் கழலெனும் ராமலிங்கம், கருமயோகஞானமுறுஞ்சித்திகள் காட்டியராமலிங்கம். (௭0)

கதிர்நலமென்னிருகண்களிற்கொடுத்திது காணெனும் ராமலிங்கம், கடவுளர்பலரென்பதைமறந்தொன்றெனக் கருதெனும்ராமலிங்கம். (௭௧)

இராகம் - ஆனந்த பைரவி.

காரணத்துள்ளனவிலமுப்பொருளெனக் கணித்துரை ராமலிங்கம், காமவெகுளிமயக்கமுந்தொலைத்திடும்வழிகாட்டிய ராமலிங்கம். (௭௨)

காரணகாரியமெட்டுமிரண்டெனக் கருதுமென்னும்ராமலிங்கம், காலநியதிமுதலியநிலையனைத்தையுங் காட்டியராமலிங்கம். (௭௩)

காண்பதுகாட்டுவதாமிணையடியெனக் கலந்துளாராமலிங்கம், காலொன்றுதூக்கியம்பலத்தினிலடித்திடுங்கணக்கருள்ராமலிங்கம். (௭௪)

காதரிப்பார்கட்குக்காட்டிக்கொடாமனற் கதியருள்ராமலிங்கம், காணுதுகாட்டியவமுதையுண்ணுதுண்ணுங்கணக்கருள் ராமலிங்கம். (௭௫)

இராகம் - சாவேரி.

கிரியையுபாசனைஞானத்தின்விரிவகை கிளத்திய ராமலிங்கம், கிரியைசரியைமுதலெண்மூன்றியலருள் கிளரொளிராமலிங்கம். (௭௬)

கின்னரவொலியோர்நிலையிற்கேட்குமெனக் கிளத்திய ராமலிங்கம், கிளக்கின்றயோகசிகோபநிடதநிலை கிடைப்பிக்கும் ராமலிங்கம். (௭௭)

இராகம் - எமுனாகல்யாணி.

கீழ்த்திசையாற்பெறுஞ்சித்திகள்பலவகை கிளத்திய ராமலிங்கம், கீழ்மேலவத்தைகளொழித்திடும்வகைபல கேட்பிக்கும்ராமலிங்கம். (௭௮)

கீழ்ப்பிறப்பெல்லாந்தண்டனைக்குறித்தெனக்கிளத்திய ராமலிங்கம், கீழ்நடுமேலமுதங்களினியல்பிது கேளெனும் ராமலிங்கம். (௭௯)

இராகம் - கேதாரகௌளம்.

குலங்குறிகுணத்தினிற்பெருமைகொள்ளாநிலை கூறி
யராமலிங்கம், குறுகப்பயந்துகூற்றுவனையுமோடச்செய்கு
றிப்பருள்ராமலிங்கம். (௮0)

குலவுபிண்டாண்டங்களறியவோரகவலைக் குறித்தரு
ள்ராமலிங்கம், குற்றமெலாங்குணமாகக்கொண்டருள்செ
யுங் கோமான் ராமலிங்கம். (௮௧)

இராகம் - பூரிகல்யாணி.

கூட்டினிற்காற்றையடைத்திடும்வகைபல குறித்தரு
ள்ராமலிங்கம், கூட்டுறுசித்திகள்கோடிபல்கோடியுங்கோ
தெனும்ராமலிங்கம். (௮௨)

கூற்றுறுங்காமச்சேற்றாசையுள்ளார்க்கெனக் கூறிய
ராமலிங்கம், கூகாவெனத்தமர்கூடியழாப்பதங் கொடுத்
தருள்ராமலிங்கம். (௮௩)

இராகம் - சல்யாணி.

கெடும்வகையொழித்திடனீற்றின்பயனெனக் கிளத்
திபராமலிங்கம், கெட்டவர்நேயம்விடாரடைவார்பெருங்
கேடெனும்ராமலிங்கம். (௮௪)

கெடிபெறுமுத்தரஞானமிதென்றருட் கிளரொளிரா
மலிங்கம், கெதியீதருட்பெரும்பதியீதறியெனக் கிளத்திய
ராமலிங்கம். (௮௫)

இராகம் - தன்னியாசி.

கேவலசகலமிலாநடுவிதுவெனக் கிளத்தியராமலிங்
கம், கேளாதனவொருங்கேதெரிந்துணர்ந்திடக் கேட்பிக்
கும்ராமலிங்கம். (௮௬)

கேசதநிதங்கொளக்கேடிலையுடற்றெனக் கிளத்திய
ராமலிங்கம், கேதமறநடிக்கும்பாததரிசனமுட் கிடைப்பிக்
கும்ராமலிங்கம். (௮௭)

ஸ்ரீராகம்.

கைதவர்கனவினுங்காண்டற்கரிதாங் கதிதரும்ராம
லிங்கம், கைவளர்நெல்லிக்கனியெனமெய்யருட் கலந்த
ருள்ராமலிங்கம். (௮௮)

கைஞ்ஞானந்தானதுநானெனவெனக் கழறியராமலி
ங்கம், கையுள்ளமுதினைவாயுட்கொண்டிடுங் கணக்கருள்
ராமலிங்கம். (௮௯)

இராகம் - சாரங்கா.

கொலைபுலைதவிர்ப்பதுமேயருணெறியெனக் கூறியரா
மலிங்கம், கொடுங்கோலொழியுமிவ்வுலகிலினியறிந்து கொ
ள்ளெனும்ராமலிங்கம். (௯0)

கோதிலெழுமூன்றுவயதினிலெனையாட் கொண்டரு
ள்ராமலிங்கம், கோரியவரமனைத்தையுமெளிதினிற்றருங்
குருபராராமலிங்கம். (௯௧)

இராகம் - எதுகுலகாம்போதி.

கௌதுவமிரண்டனைக்கடிகையில்வருமிதைக் கருதெ னும்ராமலிங்கம், கௌப்புறுமக்கமாமணிமுறைப்பயனை யுங் காட்டியராமலிங்கம். (சுஉ)

சமரசசுத்தசன்மார்க்கசங்கந்தனைத் தாபித்தராமலி ங்கம், சத்திநிபாதத்துத்தமரநுபவங் தருமெனும்ராமலி ங்கம். (சுங)

சமயத்தெய்வம்பலவுஞ்சிறுதருமெனத் தள்ளெ னும்ராமலிங்கம், சத்துச்சித்தானந்தத்தனிப்பரவத்துவின் றாமருள்ராமலிங்கம். (சுச)

சத்தவுருவமறைச்சிலம்பணியடியெனச் சாற்றியராம லிங்கம், சரவொளிமணிமுதன்மணிவகையனைத்தின் றாம ருள்ராமலிங்கம். (சுரு)

சந்தைப்படிப்பவையெல்லாந்தள்ளெனச் சாற்றியரா மலிங்கம், சந்தானகுரவர்சாற்றியதமிழ்மறைத் தரமருள் ராமலிங்கம். (சுசு)

இராகம் - பியாக்.

சாதியுஞ்சமயமுங்கடந்தமெய்ந்நெறிபுகல் சற்குருரா மலிங்கம், சாகாக்கல்வியைச்சகலரும்பெறவருள் சத்திய ராமலிங்கம். (சுஎ)

சாந்தோக்கியப்பெருநூலகப்பொருளியற் சாற்றிய ராமலிங்கம், சாக்கிரமாதிபவவத்தைகள்சாரா‌த் தகவருள் ராமலிங்கம். (கூஅ)

சாட்டையிற்பம்பரம்போன்றசமாதியைத் தந்தருள் ராமலிங்கம், சாதுக்களிவரிவரெனத்தொழில்குணம்பல சாற்றியராமலிங்கம். (கூகூ)

இராகம் - பியாசடை.

சித்தர்களெல்லாஞ்சித்தம்வியந்திடச் சித்திசெய்ராம லிங்கம், சித்துருவானசிவானந்தலகரியிற் சேர்த்தருள்ரா மலிங்கம். (க00)

சித்தியுமுத்தியுமனுபவஞ்சாதகந் தேரெனும்ராமலிங் கம், சித்தியின்பொருட்டேமுத்தியையடைவது திறமெனு ம்ராமலிங்கம். (க0க)

சித்தியும்வியக்தியுந்தருந்திருவடியெனத் தேர்ந்துரை ராமலிங்கம், சிற்பரசிகரவகரவுகரமகரந் தெரிந்தருள்ராம லிங்கம். (க0உ)

இராகம் - தேவகாந்தாரி.

சீரடியார்நிந்தைபெரும்பிணிதருமெனத் தேற்றியரா மலிங்கம், சீகாழியர்முதனல்வர்க்கும்பதிகங்கள் செப்பிய ராமலிங்கம். (க0௩)

சீதமும்வெம்மையும்பொருந்தாவகைபல தெரித்த ருள்ராமலிங்கம் சீமையிற்புறம்வெளுத்தவர்திருந்துவரெ னச் செப்பியராமலிங்கம். (க0ச)

இராகம் - பிலகரி.

சுத்தசாதகத்தினசுப்பொருளநுபவத்துணிபுரைராம லிங்கம், சுத்தவேதாந்தசித்தாந்தசமரசமெய்ச் சுகமருள் ராமலிங்கம். (கoரு)

சுத்தசிவாநுபவாதீதானந்தந் தோய்தரும்ராமலிங்கம், சுருதியுக்தியனுபவமொருங்கேபெறுஞ் சுகமருள்ராமலிங்கம். (கoசா)

சூதிதுவுண்மையிதெனமறைபுகல்வகை தொகுத்திடும்ராமலிங்கம்,சூடமுப்பருண்மருளூடலெனுமநுபவந் தோன்றச்செயராமலிங்கம். (கoஎ)

இராகம் - வசந்தபைரவி.

செகமுயிர்பரத்தின்காரணகாரியந் தெரித்தருள்ராமலிங்கம், செய்வகையோர்காற்படுமெதியளவெனச் செப்பியராமலிங்கம். (கoஅ)

சேய்மையணிமையுயிர்பரத்தினுக்குளவகை தேற்றியராமலிங்கம், சேட்படுத்தினர்கின்னரவொலியிணையெனத் தெரித்தருள்ராமலிங்கம். (கoகூ)

இராகம் - காப்பி.

சைவநிலைத்திடவருட்டிருமேனியைத் தாங்கியராமலிங்கம், சைசவத்தோடென்றுமழியாதிருக்குமோர் தரமருள்ராமலிங்கம், (ககo)

சொரூபசுபாவமுரூபமுமறிதரந் தொகுத்துரைராம லிங்கம், சொர்க்கநரகவியலீதெனவகத்தினிற் றேன்றச் செய்ராமலிங்கம். (ககக)

இராகம் - அடாணு.

சோதிபுட்சோதியின்பரமடிமுடியெனச் சொற்றிடும் ராமலிங்கம், சோதனையென்னிடபியற்றுதழியாச் சுகமருள் ராமலிங்கம். (ககஉ)

சௌளமாதிபசெய்தலங்கரித்திடுநிலை சாற்றியராம லிங்கம், சௌபாக்கியம்பெறுஞ்சோபனமிதுவெனத் தனித்துரைராமலிங்கம். (ககங)

இராகம் - முகாரி.

ஞானவரத்தனை ஞானபுரத்தனை நாடெனும்ராமலிங்கம், ஞானசபாபதிநாடுசதாகதி, நலமெனும்ராமலிங்கம்.

ஞானநடத்தனை ஞானியிடத்தனை நண்ணெனும்ராமலிங்கம், ஞாயபராபரகாயபுராதரனை நவிலெனும்ராமலிங்கம்.

இராகம் - சங்கராபரணம்.

தகரமெய்ஞ்ஞானத்தின் தனிப்பொருள்வெளிநிலை சாற்றியராமலிங்கம், தட்சணாமூர்த்தியினுற்பெறுமனுபவத் தமருள்ராமலிங்கம். (ககச)

தந்தங்குலந்தொண்ணூற்றுறங்குலந் தாவெனும்ராம லிங்கம், தன்னியலென்னியலாந்தண்ணமுதமுந் தந்தருள் ராமலிங்கம். (ககஎ)

தனக்குள்ளது தன்றலைவருக்குளதெனச் சாற்றியராம
லிங்கம், தருநெறியாவுமுள்வாங்குஞ்சன்மார்க்கஞ் சாரெ
னும்ராமலிங்கம். (௧௧௮)

தத்துவமந்திரமுதலியவாழின் றரமருள்ராமலிங்கம்
தம்மைபுணரவழியாதாருள்ளந் தரியாராமலிங்கம் (௧௧௯)

தற்போதமுறுத்தலத்துறுமடியெனச்சாற்றியராமலிங்கம்
தம்பரமானசிதம்பரநடமிது தானெனும்ராமலிங்கம்.

இராகம் - நாதநாமக்கிரியை.

தாழ்ந்திடுமுயிர்மேலருளின்றுதான்மியத்தரமருள்ரா
மலிங்கம், தாரகப்பொருணிலைநெறிதருமநுபவந் தனித்து
ரைராமலிங்கம். (௧௨௧)

தாங்கல்விடுதலிரண்டையுஞ்சமமாக்கிடுஞ்சதிரருள்ரா
மலிங்கம், தாதாவெனவுலுத்தனைப்பாடாவொரு தரமருள்
ராமலிங்கம். (௧௨௨)

தாவென்பார்க்கிந்தாவெனநல்லரு டந்திடும்ராமலிங்
கம். தாகங்கெடுத்தருட்போகங்கொடுத்தருள் சற்குருராம
லிங்கம். (௧௨௩)

இராகம் - தோடி.

திருமூலரருளுந்திருமந்திரப்பொருள்தெரித்தருள்ரா
மலிங்கம், திருநாடர்த்தந்தெய்வநிலையின்வகை தெற்றிய
ராமலிங்கம். (௧௨௪)

திருவிசயந்தருந்திருவருட்பாவெனுந் திருவருள்ராமலிங்கம், திருவருளொளிமுன்வெளிநிலைபின்னெனத் தெளிவுரைராமலிங்கம். (௧௨௫)

திரயோதசநிலைசிவவெளிநடுவெனத் தெரித்திடும்ராமலிங்கம், திருச்சிற்றம்பலத்தினிற்றிரை தூக்கிக்காட்டுந்திறமருள்ராமலிங்கம். (௧௨௬)

இராகம் - கல்யாணி.

தீபமனமொடுக்குந்தூயமதிகொடுக்குந் திருவருள் ராமலிங்கம், தீபத்தையுளத்தில்வைத்தாபத்தைத்தீர்த்திடுந் திறமருள் ராமலிங்கம். (௧௨௭)

தீயிடைநடுநடுநடுநிலைமுதலிய தெரித்தருள்ராமலிங்கம், தீயினிலுயிர்பொருள்திருவருகருநிலை திரமருள்ராமலிங்கம். (௧௨௮)

இராகம் - சாமா.

துரியநடுவிற்பரநாதநடுவிலெனத் தொகுத்திடும்ராமலிங்கம், துவந்துவந்தவிர்த்து நுசுகநிலையருள்செயத்தோன்றிய ராமலிங்கம். (௧௨௯)

துருவிடும்பரசாக்கிரமுதலநுபவத் துணிபுரைராமலிங்கம், துகளிற்பரகுருதுரியமுங்கடந்தமேவார் துறையருள் ராமலிங்கம். (௧௩௦)

இராகம் - கமாஸ்.

தூ பகலாந்தமுதன்மூவிருநிலைச் சுகமருள்ராமலிங்கம்,
தூசொழித்தவரிடங்கா சொழிந்திடுமெனுந் துறவருள்ராம
லிங்கம். (௧௯௧)

தெய்வமொன்றெனத்தேர்ந்தவர்சபைசேரெனுந்தே
சிகராமலிங்கம், தெருளாப்பருவத்தைத்தெருட்டியோர்
பொதுநிலை தெரித்திடும்ராமலிங்கம். (௧௯௨)

தேருவுலகஞ்சிவமயமெனுமோர் தெளிவருள்ராமலி
ங்கம், தேசுறத்திகழ்தருதிருநெறிப்பொருளியல் தேர்ந்
துரைராமலிங்கம். (௧௯௩)

தைபுமாசியும்வையகத்துறங்கெனற்குரை சாற்றிய
ராமலிங்கம், தையலைநீக்கிப்பின்னிருவரைக்கூடிடுந்தரமரு
ள் ராமலிங்கம். (௧௯௪)

தொன்றுதொட்டுவரும்பிறப்பிறப்பொழித்திடுந் து
ணையருள்ராமலிங்கம், தொம்பதவுருதற்பதவெளியசிபதச்
சுகமருள்ராமலிங்கம். (௧௯௫)

தோத்திரத்தினிற்சாத்திரநிலைபலவுந் தொகுத்திடும்
ராமலிங்கம், தோன்றிடுமுபநிடதங்களின்றுணிபியற் றுல
க்கிய ராமலிங்கம். (௧௯௬)

தௌக்கியமும்பெருநிலைதருமெனச்சொலுந் தரமரு
ள்ராமலிங்கம், தௌர்ப்பாக்கியமொழிவதற்குமோர் வழி
யிது தருமெனும்ராமலிங்கம். (௧௯௭)

இராகம் - காம்போதி.

நவவெளிநவநிலைநவவடிவுறும்வகை நாட்டியராமலிங்கம், நவநிலைமிசைநடுவுறுநடுவினிற்சிவ நாடெனும்ராமலிங்கம். (௧௩௮)

நடத்தையுநடஞ்செயுமிடத்தையுமிதுவென நன்கருள்ராமலிங்கம், நடங்கண்டாரடிப்பொடிநடத்துமைந்தொழிலென நவின்றிடும்ராமலிங்கம். (௧௩௯)

நனந்தலைவிதிநடந்திடுஜாதியுள் ளூடெனும்ராமலிங்கம், நனவினிற்சுழுத்தியைநாடுறுமாறு நயந்தருள்ராமலிங்கம். (௧௪௦)

நடுவினுண்ணடுவுமந்நடுவதினடுவரு ணலமெனும்ராமலிங்கம், நரைதிரையிறப்பறியார்பெரியாரென நவின்றருள்ராமலிங்கம். (௧௪௧)

நல்லமுதென்றொருநாவுளங்காட்டிய நற்குருராமலிங்கம், நம்பலமாகியவம்பலப்பாட்டே நவிலெனும்ராமலிங்கம். (௧௪௨)

இராகம் - பைரவி.

நால்வகைநெறியினுநாட்டுகவெனப்பொது நலந்தரும்ராமலிங்கம், நாயினுங்கடையேனாயினுமெனக்கரு ணண்ணியராமலிங்கம். (௧௪௩)

நாதபூதவெளிக்குனிப்பையுநடத்தை[illegible] நன்கருள்ராமலிங்கம், நாத்திகமிலையினிநமனிலை[illegible]னவருளூட்டியராமலிங்கம். (௧௪௪)

இராகம் - சாவேரி.

நிருத்தனைக்காணுவனையொருத்தருங்காணாரென நிகழ்த்தியராமலிங்கம், நினைக்கண்டவிடத்திறைவனைக்கண்டாரில்லையென நியமஞ்செய்ராமலிங்கம். (௧௪௫)

நிருவிகற்பமுஞ்சகசமுமிதுவிதுவெனு நிறையருள்ராமலிங்கம், நிரதிசயானந்தநிலைநெறியிதுவென நிகழ்த்தியராமலிங்கம். (௧௪௬)

இராகம் - சாமா.

நீரினிற்சத்திசத்தர்கணிறைவகைபல நிலையருள்ராமலிங்கம், நீரிடையொளியியல்குணவியல்பலவென நிகழ்த்தியராமலிங்கம். (௧௪௭)

நீர்மேனெருப்பதன்மேலுயிர்ப்பும்வகுத்த நிறையருள்ராமலிங்கம், நீடுமடிமைசெய்நேயனென்றுனெனு நெறியருள்ராமலிங்கம். (௧௪௮)

இராகம் - தேசி தோடி.

நுண்ணியவழிவாலவிவினையறிதலை நோக்கெனும்ராமலிங்கம், நுதனடுநடுவினிலமரநுபவநிலை நுவன்றிடும்ராமலிங்கம். (௧௪௯)

நூனக்கண்ணாலொழியாதுசுட்டெனவுண் ணோக்கருள்ராமலிங்கம், நூதனமலவிதுநாளுங்காணுவதென நுவன்றிடும்ராமலிங்கம். (௧௫௦)

நெறிநிலைவழிதுறைசுத்தசன் மார்க்கத்தினேருணைரா மலிங்கம், நெடுங்கடல்பருகியுணர்ந்திடத்தெரித்தவோர் நெறியருள்ராமலிங்கம். (க௫க)

நேரங்கடந்தவரைநினைக்கக்காலிலையெனநியமித்தரா மலிங்கம், நேரிலாதுயர்தம்பத்தேறநூல்போன்றதோர் நிலையருள்ராமலிங்கம். (க௫உ)

நைமித்தியநித்தியகன்மமிதென நவின்றருள்ராமலிங் கம், நைவகைபலவுமொழித்தனையினியிதை நாடெனும்ரா மலிங்கம். (க௫௩)

நொடியினிலண்டமெலாமறியும்வகை நுவன்றிடும்ரா மலிங்கம், நொய்யநெறிபுகலுமவையொழித்தருணானேக் கெனும்ராமலிங்கம். (க௫௪)

நோவாநோன்பினைநோற்கும்வகையிதுன்னுண் ணே க்கெனும்ராமலிங்கம், நோயற்றவாழ்வுமின்பமுந்தரும்பத மென நுவன்றருள்ராமலிங்கம். (க௫௫)

இராகம் - எமுன்.

படிநிலையாறின்விரிவகைபலவும் பகுத்துணைராமலிங் கம், படியடிவான்முடியேறினுந்தோன்றுப் பதமருள்ராம லிங்கம். (க௫௬)

பருவமிலார்க்கும்பரிவுடன்பொதுவினிற் பயிற்றிடும் ராமலிங்கம், பலகலைதெரினும்பத்திமையேவழி பாரெனு ம்ராமலிங்கம். (க௫௭)

பற்றுகளனைத்தையும்பற்றறவிடுத்திது பற்றெனும்ராமலிங்கம், படிமுடியறிந்தனைபாரிதுபாரெனப் பரிந்துரைராமலிங்கம். (௧௫௮)

பரையொளியென்மனப்பதியினில்வைத்திதைப் படையெனும்ராமலிங்கம், பரையொளிமனத்தினிலருளொளியறிவினிற் பாரெனும்ராமலிங்கம். (௧௫௯)

பரத்தினிற்பரத்தின்மேற்பரத்தினுட்பரமெனப் பரிந்தருள்ராமலிங்கம், பரபரம்பரமுதற்பெருவெளியநுபவம் பகர்ந்தருள்ராமலிங்கம். (௧௬0)

பரமுடனபரமும்பகர்நிலையிவையெனப் பகுத்துரைராமலிங்கம், பரம்பெறும்பரந்தரும்பரம்பதம்பரமெனப் பரிந்துரைராமலிங்கம். (௧௬௧)

பதிபசுபாசமுந்நிலைவிரிவனைத்தையும் பகுத்தருள்ராமலிங்கம், பசியாவமுதிது பகராநிலையெனப் பரிந்தருள்ராமலிங்கம். (௧௬௨)

இராகம் - நாதநாமக்கிரியை.

பாம்பும்பாம்பாட்டியுமனமாயையென்றுணர் பண்பருள்ராமலிங்கம், பாசம்பெறாதுமெய்ப்பதியிலுறுதமர் பதமுரைராமலிங்கம். (௧௬௩)

பார்முதனல்வகையோனியிலுயிர்பெறும் படைப்பருள்ராமலிங்கம், பார்முதனாதமுமேற்பலதத்துவப் பண்புரைராமலிங்கம். (௧௬௪)

பாவலர்க்கரியமெய்ம்மொழிப்பொருள்விளக்கம் பக ர்ந்தருள்ராமலிங்கம், பாடுவோர்க்கருளக்கூத்தாடுகின்றா ரெனப் பரிந்தருள்ராமலிங்கம். (௧௬௫)

இராகம் - கமாஸ்.

பிரணவவடிமுடியினுநடுவினுமடி பேசியராமலிங்கம்
பிரகிருதிப்பெருநூற்பாராத்தவர் பிச்செனும்ராமலிங்கம். ()

பிண்டத்துயிரின்றாரிசையடக்கிடும் பீடோராமலிங்கம்
பின்னமபின்னமுமுபயமுமுறுகிலே பேசியராமலிங்கம். ()

இராகம் - தோடி.

பீதாம்பரனயனரனெனத்தொழிலாற் பிரிவெனும்ரா மலிங்கம், பீடுறும்பித்தருக்கெவையுமொப்பாமெனப் பே சியராமலிங்கம். (௧௬அ)

பேரம்வற்றியும்பிள்ளைப்பல்விடுமெனவன்பின் பெருக் கருள்ராமலிங்கம், பிடிக்கும்போதமிறந்திடலொருவகை பேறெனும்ராமலிங்கம். (௧௬௯)

இராகம் - பைரவி.

புறநடுவொடுகடைப்புணர்ப்பிக்குமுதலெனப் புகன் றிடும்ராமலிங்கம், புகலருமகண்டபூரணநடுவகநடு புரிந்த ருள்ராமலிங்கம். (௧௭0)

புறப்பூவகப்புறப்பூவுறுப்பியற்றிடும் புணர்ப்புறாரா மலிங்கம், புண்ணியருளத்தினிற்பொருந்தியவடியெனப் புகன்றருள்ராமலிங்கம். (௧௭௧)

இராகம் - கல்யாணி.

பூரணமுறிலெலவையுஞ்தெரிந்திடுமெனப் புகன்றிடும்ராமலிங்கம், பூட்டியவிருவினைக்கடலொழித்திடும்வகை புரிந்தருள்ராமலிங்கம். (௧௭௨)

பூதமெனும்பெயர்க்கிலக்கியமிலக்கணம் புகன்றருள்ராமலிங்கம், பூவொருமூன்றைறங்தேழ்நவமுதலிய பொருளருள்ராமலிங்கம். (௧௭௩

இராகம் - கேதாரகௌளம்.

பெண்ணிடைநான்கெனவாணிடைமூன்றெனப் பேசியராமலிங்கம், பெண்ணிடைமூன்றாணிடையிரண்டாமெனும் பிரிவுரைராமலிங்கம். (௧௭௪)

பெண்ணியல்மனமாணியலறிவாமெனப் பேசியராமலிங்கம், பெண்ணினுள்ளாணாணுட்பெண்ணெனும்வகை பிரித்தருள்ராமலிங்கம். (௧௭௫)

இராகம் - காம்போதி.

பேரூரில்லாப்பெரும்பொருளிதுவெனப் பிரித்தருள் ராமலிங்கம், பேய்க்குணமறிந்துமிந்நாய்க்குமோர்பெருவழி பேசியராமலிங்கம். (௧௭௬)

பையரவம்புனைங்காடுமடைவிதெனப் பகர்ந்திடும்ராமலிங்கம், பைங்குழலுமையொருபாகமமர்ந்திடும் பண்பருள்ராமலிங்கம். (௧௭௭)

பொருட்பதமெல்லாம்புரிந்துமேலருட்பதம் பொருந்தெனும்ராமலிங்கம், பொய்ந்நெறியனைத்தையும்போக்கியோர்பொதுநெறி புகன்றருள்ராமலிங்கம். (௧௭௮)

போதிக்குமென்மொழியாவுமரன்சொலெனப் புரிந்தருள்ராமலிங்கம், போகமதொழித்தருட்போகமுந்தரலருட் புகழெனும்ராமலிங்கம். (௧எ௯)

இராகம் - எதுகுலகாம்போதி.

மதியிரவியனலினிலையனைத்தையும்பெற வழங்கியராமலிங்கம், மனமுயிர்நெகிழ்வுபத்திமையன்பெனவாய் மலர்ந்தருள்ராமலிங்கம். (௧அ0)

மலையலையெனவுலைமதங்களுக்கெட்டா மதியுடைராமலிங்கம், மதிநலந்தெரிமனுமுறைகண்டவாசகம் வகுத்துடைராமலிங்கம். (௧அ௧)

மனமென்வசமருள்வசநானுறவோர் வழியருள்ராமலிங்கம், மதிவிதிசஞ்சிதவினைவிரிவனைத்தையும் வகுத்துடைராமலிங்கம். (௧அ௨)

மரணபயந்தவிர்வாழ்வுமெய்வாழ்வென வழங்கியராமலிங்கம், மணிவாசகர்பேறிதுவெனக்காட்டிட மறைந்தொளிராமலிங்கம். (௧அ௩)

மந்தணமிதுமறுவில்லாமதியான் மதியெனும்ராமலிங்கம், மதியில்விளைந்தமருந்தையருந்தவோர் வகையருள் ராமலிங்கம். (௧அ௪)

மண்ணினிலைம்பூவைந்திறல்பலபல வகுத்துடைராமலிங்கம், மண்ணியனுறுச்செயல்தலைநிலைமுதலிய வழுத்தியராமலிங்கம். (௧அ௫)

இராகம் - சங்கராபரணம்.

மாபச்சடிலமரித்திடினெழுமெனவாய் மலர்ந்தருள்ராமலிங்கம், மாபாதகர்சிவநிந்தைபுரிவரெனவழங்கியராமலிங்கம். (௧௮௬)

மாந்தரெளிதிற்கதியுறுஞ்ஜீவகாருண்யம் மலர்ந்தருள்ராமலிங்கம், மார்க்கமதறிந்துமுட்பொருளறியாருளமருள்ராமலிங்கம். (௧௮௭)

மாமாயையசையநடித்திடுமடியென மலர்ந்துரைராமலிங்கம், மாயையைமிதித்திடுந்திருவடிநிலைபெற வழங்கியராமலிங்கம். (௧௮௮)

மாணிக்கவாசகர்க்கருளியசேவடி மாண்பருள்ராமலிங்கம், மாதேவனணியுமாலையிதென்றருள் மகத்துவராமலிங்கம். (௧௮௯)

இராகம் - பூரிகல்யாணி.

மிருகமுதலியவைக்கூழுணவேயென விளக்கியராமலிங்கம், மிகவருமாந்தர்க்குமதியுணவுமுண்டென விளம்பியராமலிங்கம். (௧௯௦)

மிடைந்திருந்தனவண்டவகையடியணுவென வியந்துரைராமலிங்கம், மித்தையவித்தையநித்தியநித்திய விளைவருள்ராமலிங்கம். (௧௯௧)

இராகம் - சாமா.

மீதானத்கருளொளிவெளியடியென விளக்கியராமலிங்கம், மீலத்திற்பலநூதனந்தோன்றுமுன்னென விளம்பியராமலிங்கம். (௧௯௨)

மீக்குணத்தோருமுணர்ந்திடற்கருநிலை மிகவுரைராமலிங்கம், மீட்பாரில்லாவெனையுமேலேற்றிட விளக்குறும் ராமலிங்கம். (௧௬௩)

இராகம் - நாட்டைக்குறிஞ்சி.

முந்துறுமைவர்க்குமைந்தொழிலியற்றிடு முடிபருள் ராமலிங்கம், முத்தியுஞ்சித்தியும்வியக்தியுமடைவது முறையெனும்ராமலிங்கம். (௧௬௪)

முத்திறல்வடிவனைவமுடிந்திடுநிலைநெறி முடிபருள்ராமலிங்கம், முத்தமிழ்நாற்கவிதெரிந்துபுகன்றிடு முறையருள்ராமலிங்கம். (௧௬௫)

இராகம் - தன்னியாசி.

மூவிருநிலையின்முடிநடுவடிமேன் முடிபுனைராமலிங்கம், மூவனையும்சுவாமிகளெனமொழிவது முறையெனும் ராமலிங்கம். (௧௬௬)

மெய்வழிமெய்யைவிடாவழிமேவென விளக்கியராமலிங்கம், மெய்கண்டார்மெய்யொடுமேவினரென விளம்பிய ராமலிங்கம். (௧௬௭)

மேனிலைமேவநெஞ்சறிவுறுத்தலில்விதி விளம்பியராமலிங்கம், மேதாவியர்பெறுஞ்சூக்குமநெறியுறும் விளைவருள்ராமலிங்கம். (௧௬௮)

மைத்திரியாதியுற்றவர்பெறுவார்மதி வழியெனும்ராமலிங்கம், மைவிழியார்மயலொழியாரடையார்மதியெனும் ராமலிங்கம். (௧௬௯)

மொண்டுகொண்டருளமுதுண்டருளுநல்சித்திமுறையெனும்ராமலிங்கம், மொத்துறவாவென்றணுகார்தூதரென மொழிந்திடும்ராமலிங்கம். (௨00)

மோனவேழ்வெளிபராபரத்தடங்கிடு முறையருள்ராமலிங்கம், மோகமொழியசத்துவவுணவேவழி முதலெனும்ராமலிங்கம். (௨0௧)

இராகம் - தனாசரி.

யாவரான்மவுரிமையிலாரசுரரென் றருளியராமலிங்கம். யாதொருபற்றுமிலார்க்குதவுதனல் லறமெனும்ராமலிங்கம். (௨0௨)

யாதுங்கருதாதிம்மையிலாட்கொண் டருளியராமலிங்கம், யாவுஞ்சிவன்செயலெனுமோர்பெருநிலை யமரெனும்ராமலிங்கம். (௨0௩)

இராகம் - சஹனா.

யோகாந்தகலாந்தமிசைக்கழலிணை யுளமெனும்ராமலிங்கம், யோகமுறுருக்கறுமனமாயையென் றுணர்த்தருள்ராமலிங்கம். (௨0௪)

இராகம் - அடாணா.

வம்புகள்பேசிடும்வண்டர்களுந்தமை வணங்கச்செய்ராமலிங்கம், வள்ளலெனுந்திருப்பாடலுக்கோருரை வழங்கியராமலிங்கம். (௨0௫)

வட்டமுஞ்சதுரமுங்கோணமுமற்றதின் வகையருள்ராமலிங்கம், வன்மையிலவ்வச்சக்கரத்தலைவர்சீர் வழங்கியராமலிங்கம. (௨0௬)

வயங்குந்தொண்டமண்டலமென்பதற்கிலக்கணம் வகுத்துரைராமலிங்கம், வளம்பெறுந்தமிழ்க்கடற்பெருக்கெனத்திருவாய் மலர்ந்தருள்ராமலிங்கம். (௨0எ)

வளநிலைசத்தியின்வளர்நிலைவிரிவகை வழுத்தியராமலிங்கம், வடுவுறுபோக்கொடுவரவறுநெறியின்வகையருள்ராமலிங்கம். (௨0அ)

இராகம் - சாவேரி.

வான்கலைந்திடப்புகன்றிடும்பெருநூல்விரிவகையருள்ராமலிங்கம், வான்முகிற்சத்திசத்தர்கள்விரிவகைபல வகுத்துரைராமலிங்கம். (௨0கூ)

வாடுனீக்கியமன்றிடையிறவாவாழ்வெனும்ராமலிங்கம், வாதவூர்திருக்கோவையினுண்மெய் வழங்கியராமலிங்கம். (௨க0)

வாட்டந்தவிர்த்துன்மனவோட்டங்கெடுத்திடெனும் வகையுரைராமலிங்கம், வாழ்க்கையிலறம்புரிவாரும்பெரியரென வழுத்தியராமலிங்கம். (௨கக)

இராகம் - உசேனி.

விண்ணினில்விண்ணாடுவிண்ணுறும்விண்ணென விளம்பியராமலிங்கம், விண்ணியல்சிவத்தின்வியனிலையளவிபவிரிவருள்ராமலிங்கம். (௨க௨)

வித்தும்பதமும்விளைவுபகரிப்பையும் விளக்கியராமலிங்கம், விதிவைக்கொள்வார்மரணந்தருஞ்சமயம் விடாரெனும்ராமலிங்கம். (௨கங)

வித்தினில்விளைவதில்வித்துறும்விளைவையும் விளம்பியராமலிங்கம், விந்துநாதவொளிவெளிகடந்ததன்மேல் விளைவருள்ராமலிங்கம். (௨௧௪)

இராகம் - தேசி தோடி.

வீரனென்போனவனைவென்றவனென விளக்கியராமலிங்கம், வீய்ந்தசிதாபாசத்துவம்போக்கவோர் விளைவருள்ராமலிங்கம். (௨௧௫)

வீசிடுங்காற்றிடைப்பூதிறவியல்பல விரிவருள்ராமலிங்கம், வீயாப்பெருநலமெல்லாமுவந்தருள் வித்தகராமலிங்கம். (௨௧௬)

வீதியின்மேடைமேற்கூடமேலேழ்நிலை விளம்பியராமலிங்கம், வீறுமோர்தம்பத்தின்மேன்முதல்சந்நிதி விளக்கியராமலிங்கம். (௨௧௭)

இராகம் - கல்யாணி.

வெண்மையிலேந்திரம்வண்ணவகையின்பல விளைவருள்ராமலிங்கம்,வெண்மைத்திரையான்மெய்ப்பதிமறைப்பென விளம்பியராமலிங்கம். (௨௧௮)

வெளியினின்முடிநிலைமுதலியவகுத்திடும் விதியருள் ராமலிங்கம், வெளியிடைப்பகுதியின்விளைவியல்களவியல் விரிவருள்ரரமலிங்கம். (௨௧௯)

வெளியிடைச்சித்தியல்வித்தியலுயிரியல் விரிவுரைராமலிங்கம், வெளியிடையொன்றால்விளைந்தனபலவென விளக்கியராமலிங்கம். (௨௨௦)

இராகம் - சுருட்டி.

வேதாகமமுடிச்சுடரொளியடியென விளம்பியராமலிங்கம், வேதாந்தம்முதலாறந்தாந்தமும் விரித்துரைராமலிங்கம். (உஉக)

வேகாக்கால்சாகாத்தலைமுதலிய விளைவருள்ராமலிங்கம், வேண்டியநல்விருப்பெல்லாமெனக்கருள் வித்தகராமலிங்கம். (உஉஉ)

வையகத்தார்போன்மாண்டுழலாப்பல வகையருள்ராமலிங்கம், வைதிகசைவத்தின்மார்க்கமிதாமென வழுத்தியராமலிங்கம். (உஉ௩)

வைகறைபருட்ஜோதியினுளமலர்வகைவகுத்துரைராமலிங்கம், வையகம்வானமற்றவும்வாழ்ந்திடவருள் வழங்கியராமலிங்கம். (உஉ௩)

ஆனந்தக்கண்ணி முற்றுப்பெற்றது.

---

வேண்பா.

சித்தகுரு ராமலிங்க தேசிகனார் கண்ணிகளைச்
சுத்தமிகும் பத்தியுடன் தோத்திரிப்போர்-முத்தர்குழாஞ்
சார்ந்தோங்கி வாழ்வரெனச் சாற்றியவோ ருண்மை யெ
ளார்க்கோங்கு மீசானி வன் [னுள்

திருவருட்பிரகாசவள்ளலார் திருவடியேதஞ்சம்.

22316